பக்கங்கள்: பதது

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்

# வலம்புரி

## VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 27 | ஞாயிற்றுக்கிழமை | (11-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 23

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# உடன்பாட்டிலிருந்து விலகுவதாக அரசாங்கம் அறிவிக்கவில்லை

## நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக இலங்கை அரசாங்கத் தரப்பிலிருந்து, தமக்கு உத்தியோகபூர்வ முன்னறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை என இலங்கைக்கான நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவிததுள்ளன. போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக வெளியான செய்திகள் குறித்துக் கருத்துக் கேட்டபோதே, நோர்வேத் தூதரக அதிகாரி இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து நோர்வே அரசாங்கத்துக்கும் அறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை எனவும்,

அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதானால், அதுகுறித்து 14 நாட்க

(10ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் எம்.பிக்கள் யாழ்.வருவர்

(கொழும்பு)

சுவீடன்நாட்டு நிதி உதவியுடன் யுனிசெவ் மூலம் வடபகுதியில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களை பார்வையிடுவதற்காக சுவீடன நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறுபேர் கொண்ட குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருகை தரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ அரசியல் துறைப பொறுப்பாளரையும் சந்திக்கவுள்ளனர். (த)

## சமாதான முயற்சியில் இருந்து விலகும்

# பிரதமர் ரணிலின் அறிவிப்பு

# அவரின் அரசியல் நடிப்பு

## அரசியல் அவதானிகள் விமர்சனம்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தான் செய்து கொண்ட யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொள்ளப் போவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருப்பது, சமாதான முயற்சிகளில் இது வரைகாலமும் அவர் காட்டி வந்த இரட்டை வேடம் தென்னிலங்கை புத்திஜீவிகள் மத்தியில் பலத்த சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

பாதுகாப்பு அமைச்சை மீண்டும் தன்னிடம் ஒப்படைக்காது போனால் சமாதான முயற்சிகளில் இருந்து விலக்கிக் கொள்ளப் போவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருப்பதையடுத்தே அரசியல் ஆய்வாளர்கள் மேற்கண்டவாறு கருதது வெளியிட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புத் துணியால் வாயைக்கட்டி புளொட் உறுப்பினர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பினரால் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் தொடர்பான 30வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவில்லை.

இதேவேளை புளொட் அமைப்பினர் கறுப்புத் துணியினால் வாயை மூடிக் கட்டியவாறு நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினர்.

மேற்படி நினைவு தின நிகழ்வுகளுக்கிடையில் தெருக்கூத்து நிகழ்வும் நடைபெறவிருந்ததினால் அசம்பாவிதங்கள் ஏற்படலாமெனக் கருதி கண்காணிப்புக்குழுவினருக்கு அறிவிக்கப்பட்டது.

கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து நிலைமைகளை அவதானித்தனர். இதேவேளை அவ்விடத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். (த-3,7)

## தனியார் பஸ் உரிமையாளர்கள் செவ்வாயன்று வேலை நிறுத்தம்

### குடாநாட்டிலும் பஸ்சேவை ஸ்தம்பிதமாகும்

(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வற்வரியை நீக்குமாறு கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பதற்கு அகில இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் குடாநாட்டுத் தனியார் பஸ் உரிமையாளர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகவுள்ள இவ்வேலை நிறுத்தப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர் கடத்தப்பட்டார்


(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்றிரவு முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

ஏறாவூரைச் சேர்ந்த சகாப்தீன் (வயது20) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார்.

வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுதம் தரித்த இனம் தெரியாத

(10ஆம் பக்கம் பார்க்க)






## மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி வைத்திருப்பதால்

### மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி வைத்திருப்பதால்

# போர் நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்ய வேண்டும்

(கொழும்பு)

இருபெரும் கட்சிகளிடையான சகவாழ்வு முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதானத்தை முன்னெடுத்து செல்ல விருப்பினால், தம்மிடம் தேவையான அதிகாரங்களை ஒப்படைக்குமாறு ஜனாதிபதியிடம் மீண்டுமொரு முறை கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போது அமைச்சர் பீரிஸ் சமாதான முயற்சிகள் தடைப் படாமல் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் அரசாங்கம் உறுயுடன் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற காரணத்தினால் பல விரும்பத் தகாத செயல்கள் நடைபெற்றுள்ளன. நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இம் மூன்று அமைசசுக்களைத் தொடர்ந்து வைத்து (10ஆம் பக்கம் பார்க்க)

### பாதாள உலகத் தலைவரை சுட்டவர்

# எனது சகோதரனைக் கொன்றவரை பழிவாங்கிவிட்டேன் என சத்தமிட்டார்

### பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து பாதாள உலகத் தலைவர் தம்மிக்க அமரசிங்காவைச் சுட்டுக்கொன்ற பின், கொலையாளியான சமிந்த உதய குமார என்பவர், தனது சகோதரனைக் கொன்றவனைப் பழிவாங்கிவிட்டேன்என சத்தமிட்டதாக இச் சம்பவத்தை நேரில் கண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது பற்றிவிபரிக்கையில்,

கொலையாளி சமிந்த ஒரு டயரியுடனும் பைகளுடனும் நீதிமன்ற விசாரணையின் போது பொது மக்கள் பார்வையிடும் இடததில் அமர்ந்திருந்தார். இச் சம்பவம் வெள்ளிக் (10ஆம் பக்கம் பார்க்க)



வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து ஒட்டுமடச் சந்திப்பகுதியில் கடை ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளான காட்சியைப் படங்களில் காணலாம்.

# துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் நபர் ஒருவரின் சடலம் மீட்பு

### சாவகச்சேரி கல்வயலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இருந்து நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பகல் பிரஸ்தாப நபர் இனந் தெரியாத நபர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலையின் பின்பகுதியில் . துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. பிரஸ்தாப நபரின் சடலம் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு நேற்றுப் பிற்பகல் 3.20 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை வரை சடலம் இனங்காணப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-3,7)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினை புதிய வழிமுறையின் கீழ் தீர்க்கப்படும்

## சீனா நம்பிக்கை தெரிவிப்பு

(பீஜிங்)

அரசியல் நிலையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் விவாதிக்கப்படவிருக்கும் புதிய வழிமுறையின் கீழ் இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படுமென்று சீனா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த மாதம் இது தொடர்பாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பர்வேஷ் மிஸ்ரா பீஜீங் வருவார் என்று சீனா வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹூாங்ஹுவான் தெரிவித்தார்.

சென்றாண்டு ஒக்டோபர் 23,24ம் திகதி முதல்சுற்றுப் பேச்சு நடைபெற்றது. இது மிகவும் ஆக்கபூர்வமானதென்று இந்தியாவும் சீனாவும் தெரிவித்தன.

சென்ற ஆண்டு யூனில் வாஜ்பாயின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சீனப் பயணத்தின் போது, எல்லைப் பிரச்சினையை விவாதிக்க சிறப்புப் பிரதிநிதியை இருநாடுகளும் நியமித்தமை குறிப்பிடத்தக்கது. (9)

# அணுவாயுதத் திட்டத்தைப் பெற பாக்.விஞ்ஞானிகளுக்கு இலஞ்சம்

## லிபியா அறிவிப்பு

(திரிப்போலி)

பல மில்லியன் டொலர்களை லஞ்சமாகக் கொடுத்து பாகிஸ்தான் விஞ்ஞானிகளிடம் இருந்து அணுவாயுதத் திட்டத்தைப் பெற்றதாக லிபியா கூறியுள்ளது.

பாகிஸ்தானில் அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளுக்கு 40 மில்லியன் டொலர்களை லஞ்சமாகக் கொடுத்துப் பெற்ற தொழில் நுட்பத்தை அடுத்து, லிபியா அணுவாயுதம் தயாரிக்கும் திட்டத்தை ஆரம்பித்ததாக அந்நாட்டு அதிபர் கடாபியின் மகன் சன்டேரைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

லிபிய விஞ்ஞானிகளுக்கு பிரிட்டனில் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும்,ஆசிய நாடுகளிலும் தென்னாபிரிக்க நாடுகளில் இருந்தும் கறுப்புச் சந்தையில் பல்வேறு உபகாரணங்களைக் கொள்வனவு செய்ததாகவும் சர்வதேச ஆயுத வியாபாரிகள் இத் திட்டத்துக்கு பேருதவியாக இருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# காஷ்மீர் தீர்வு முயந்சிக்கு அமெ.பாராட்டுத் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தன்னிடம் திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஆயினும் தீர்வு காண்பதற்காக இந்திய பாகிஸ்தான் தலைவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

இப்பிரச்சினை அமைதியான முறையில் தீர்க்கப்படுமென்றும் அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்தது.

அமெரிக்காவில் துணை வெளியுறவு அமைச்சர் றிச்சட் ஆமிடேஜ், பாகிஸ்தான் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் பிரதமர் வாஜ்பாயும் அதிபர் முஷாரப்பும் அரசியல் பக்குவத்தோடு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரச்சினைகளைப் போர் மூலம் தீர்ப்பதைவிட சமாதான வழிகளில் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையை உலகிற்கு இந்த முயற்சி உணர்த்தியுள்ளது என்றும் அவர் கூறினார். மக்களிடையே தொடர்பு, சாலைப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, பொருளாதாரத் தொடர்புகள் போன்றன வலுவான அரசியல் பிணைப்புக்களுக்கு அடித்தளம் அமைத்துத் தருகின்றன என்று ஆமிடேஜ் குறிப்பிட்டார்.

எனினும் சீ.எஸ்.ஐ.எஸ். என்னும் அமெரிக்க செய்தியாளர் மன்றம் சில சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. முஷாரப் அரசு பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள சவால்களை நன்கு உணர்ந்திருப்பதில் சில முரண்பாடுகளும் உண்டு.

ஜனநாயகத்தை நிலைநாட்ட முஷாரப் அரசு விரும்புகின்ற நேரத்தில் அரசியலில் இராணுவத்தின் தொகையை நிரந்தரமாக்கும் நோக்கமும் அதற்குள்ளது. (9)

# பிரச்சினையை பேசித் தீர்க்க இந்தியா-பாகிஸ்தான் இணக்கம்

(புதுடில்லி)

குற்றவாளிகளை இருநாடுகளுக்கிடையிலும் பரிமாற்றிக் கொள்ளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இந்தியாவும் பாகிஸ்தானும் சம்மதித்துள்ளன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அண்மையில் மேற்கொண்ட பாகிஸ்தான் விஜயத்தின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷராப்பைச் சந்தித்துப் பேசிய வேளையில் இந்தத் தீர்வு காணப்பட்டதாக பாகிஸ்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளுக்கு நேரடியாகப் பேசித் தீர்வு காண்பது என்றும் இடையிடையே எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவைகளை ஊடகங்களில் வெளிப்படுத்தாமல் அமைதியான பேச்சுவார்த்தைககள் மூலம் தீர்த்தக்கொள்வதென்றும் இரு தலைவர்களும் இணங்கியுள்ளதாக அந்தத்தகவல் மேலும் கூறுகின்றது.

இந்திய-பாகிஸ்தான் நாடுகளிடையே குற்றவாளிகள் பரிமாற்ற ஒப்பந்தம் தொடர்பாக இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி பாகிஸ்தான் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-9)

# பாக்.இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் எல்லைப் புறத்தில் உள்ள பாகிஸ்தான் இராணுவ முகாம் ஒன்றின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 4 பாகிஸ்தான் படைவீரர்கள் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

தென் வெஷிரிஸ்தான் பகுதியிலுள்ள வானா நகரிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கு எதிராக அண்மையில் தேடுதல் நடவடிக்கை ஒன்றை பாகிஸ்தான் படையினர் மேற்கொண்டதுடன், முகாம் ஒன்றையும் அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தீவிரவாதிகள் மோட்டார்கள் மூலம் இந்தத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் தலிபான் படையினரின் ஆதரவு இயக்கம் ஒன்றை இதனை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(து-9)

# ம.தி.மு.கவின் நிலைபற்றி வை.கோ. அறிவிப்பு

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து தமது கட்சி விலகியதில் மறு பரிசீலனைக்கே இடமில்லை என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. கூறினார்.

ஒரு வழக்குத் தொடர்பாக நாகபட்டணத்துக்கு அழைத்துவரப்பட்ட அவர் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணியை முறித்துக் கொண்டதால் விளையும் எந்தவொரு விளைவைப் பற்றியும் கவலைப்படவில்லை என்றும் தெரி வித்தார். (து)



யாழ்ப்பாணத்தில்
புத்தர் சிலை...
ஏன் இந்த அவசரம்!

சமாதான முயற்சியில்
இருந்து பிரதமர் விலகுவாரா?

விலை ரூபா. 16/=




கே.வி.குணசேகரம் எழுதும்
கல்தூண்கள் தொடர்.

மற்றும் பல அம்சங்களுடன்...

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

# சங்குநாதம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## துரித அபிவிருத்தித்திட்ட ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான துரித அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பது தொடர்பான முக்கிய ஆலோசனைக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிரதமரின் ஆலோசகர் எஸ். சிவானந்தன், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ ஆகியோரும் பங்கு பற்றியிருந்தனர்.

இவ் ஆலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் தலைவர்களும், பிரதேச செயலர்களும் பங்கு பற்றி தயாரிக்கப்படவுள்ள துரித அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய செயல் திட்கள் பற்றி நீண்டநேரம் ஆலோசித்தனர். (உ-16,43)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் சிவசக்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலிச் சிவன்கோவில் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(ச)

## கால் கோள் விழா

(யாழ்ப்பாணம்)

தரம்-1 மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கும் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜோலன்ட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தரம்-2 மாணவர்கள் புதிய மாணவர்களை இன் முகத்துடன் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.தொடர்ந்து அவர்களை மகிழ்விக்கும் வகையில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருத்தினராக யாழ்.வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணியம் கலந்துகொண்டார். (உ-7)

## ப.நோ.கூ.ச. கிளைகளை இணைக்கும் முயற்சிக்கு மக்கள் எதிர்ப்பு

(தொல்புரம்)

சங்கானைப் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் 25,24 ஆம் கிளைகளை ஒன்றாக இணைக்கும் முயற்சியில் மேற்படி சங்க நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, இம் முயற்சியைக் கைவிடுமாறு சம்பந்தப்பட்ட மக்கள் பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-70)

## தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின்

# உலகில் சமாதானத்தை நிலை நிறுத்த உண்மையான அன்பே அவசியமானது

சமாதானம் என்பதே எமது மண்ணின் தேவையாக இருக்கிறது. சமாதானம் என்பதே இன்று எம் மக்கள் எல்லோரினதும் ஏக்கமாக இருக்கிறது. அமைதியை ஏற்படுதது



வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் என்று சமாதானம் செய்வோராக நாம் பணியாற்றும்படி மலைப்பொழிவில் நமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் நாம் சமாதானத்தை அடைய செய்ய வேண்டிய ஒரு முக்கிய பணி உண்டு. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விடுத்த புத்தாண்டு தின செய்தியானது சமாதானத்தை நாம் செபத்தின் வழியாக அடைய முடியும் என்ற நம்பிக்கையை தருவதாக இருக்கிறது.

யாழ் ஆயர் வெளியிட்ட அச்செய்தியினை எமது எல்லாப் பத்திரிகைகளும் சிறப்பு முக்கியத்துடன் வெளியிட்டு முன்னுரிமை கொடுத்திருந்தன. சமயத் தலைவர் என்கின்ற வகையில் தமிழ் மக்கள் அனைவருக்கும் பல தடவை விடுத்த வேண்டுகோளை இப்புதிய ஆண்டில் திரும்பவும் அழுத்தத்தோடு விடுக்க விரும்புகிறோம். இவ்வாண்டு சமாதானத்தை அடைய தமிழ் மக்கள் அனைவரும் இடைவிடாது செபிக்க வேண்டும் என்பதே அவ்வேண்டுகோள் ஆகும். செபத்தின் வழியாகத்தான் நாம் சமாதானத்தை அடைய முடியும் என்ற எமது அசைக்கமுடியாத நம்பிக்கையை செபத்தின் வழியாக நிலை நாட்டுவோம் என அவர் தம் செய்தியில் சமாதானத்தை அடைய செபிப்பதை முக்கிய பணியாகக் கொள்ளுவோம் என வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

புத்தாண்டு செய்தியை விடுத்த மற்றைய தலைவர்களும் குறிப்பாக திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலும் இவ்வேண்டுகோளையே விடுத்திருக்கிறார்.

### உலக சமாதான தினம்

பாப்பரசராக இருந்த காலம் முதல் ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் உலக சமாதான தினமாக பிரகடனப்படுத்தி உலக சமாதானத்திற்காக செபிக்கும்படியும் உழைக்கும் படியும் அழைப்பு விடுத்து வந்துள்ளது. 6ஆம் சின்னப்பர் பாப்பரசரும் அவரைத் தொடர்ந்த மற்றைய பாப்பரசர்களும் இந்த சிறப்பான பணியை தவறாமல் மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

தமது பணியின் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள பாப்பரசர் 2ஆம் யோவான் பவுல் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்திலும் உலக சமாதானத்திற்காக செபிக்கும்படியும் உலகில் சமாதானத்தை ஏற்படுத்த உழைக்கும்படியும் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார். இவ்வாண்டு தமது 25ஆவது உலக சமாதான தினச் செய்தியை சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்னும் தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். உண்மையில் கடந்த 25 ஆண்டுகளாக அவர் வெளியிட்டு வந்த சமாதான தினச் செய்திகளின் சாரத்தை சாறு பிழிந்தது போல் இவ்வாண்டு செய்தி அமைந்திருக்கிறது என்று குரல்தரவல்ல வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். கடந்த 25 ஆண்டுகளிலும் சமாதானத்தின் பல்வேறு நிறங்களை நாம் தெளிவாக விளக்கி விட்டோம். இபபோ சமாதானமாக இருப்பதும் சமாதானத்தை வாழுவதும் எமது தேவையாக இருக்கிறது. இனி சமாதானத்தைச் செயல்படுத்துவோம், வாழுவோம் என அவர் வேண்டி நிற்கிறார்.

1979ஆம் ஆண்டு இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் தமது முதலாவது சமாதான தின செய்தியை சமாதானத்தை அடைய சமாதானத்தை போதியுங்கள் என்னும் தலைப்பில் அவர் விடுத்திருந்தார். சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இவ்வாண்டின் செய்தியின் தலைப்பிலும் 1979ஆம் ஆண்டு செய்தியின் தலைப்பிலும் ஒற்றுமை இருப்பதை நாம் இங்கு நோக்க வேண்டும். இவ்வாண்டுக்கான சமாதான தினச் செய்தி சர்வதேச சட்டம் சமாதானத்தின் ஒரு வழியாகும் என்ற தலைப்பில் வெளியிடப்படும் என வத்திக்கான் ஊடகங்கள் அறிவித்த பின்னரும் திருத்தந்தை அதன் தலைப்பை சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என மாற்றியிருப்பதை காணக்கூடியாக இருக்கிறது.

### அர்ப்பணிப்புடன் செயற்படுவோம

திருத்தந்தை 2ஆம் யோவான்

என்ற இவ்வாண்டுச் செய்தியை குறிப்பான விதமாக சமாதானத்தை தமது முக்கிய கடமையாக கொண்டுள்ள நாடுகளின் தலைவர்களுக்கும், சமாதான ஒப்பந்தங்களை செயது சர்வதேச சட்டத் தன்மையை நிலைநாட்டும் சட்டத்தரணிகளுக்கும், இளைஞர்களுக்கு சமாதானத்தை போதிக்கும் ஆசிரியர்களுக்கும் என விழித்து ஆரம்பிக்கிறார். நீங்கள் அனைவரும் பேதுருவானவரின் வாரிசான எமது குரலைக் கேளுங்கள். 2004ஆம் ஆண்டின் ஆரம்பத் தினமான இன்றும் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் அது எமது கடமையாக இருக்கிறது என்று குரல் எழுப்பும் எமது பணிவான வேண்டுகோளுக்கு செவிசாயுங்கள். கடந்த 25 ஆண்டுகளாக எமது முன்னோரை பின்தொடர்ந்து இத்தினத்தை சமாதான தினமாக அறிவித்து சமாதானத்திற்கான அழைப்பை விடுத்துக்கொண்டே வந்திருக்கிறோம். 25 ஆண்டுகளாக திருச்சபை முன்பாகவும் உலகின் முன்பாகவும் விசுவாசி

## பரமபிதா காட்டிய பாதை

கள் முன்பாகவும் நல்மனது படைத்த அனைத்து மனிதர்கள் முன்பாகவும் சமாதானத்துக்காக நாம் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறோம். இன்று மீண்டும் ஒரு தடவை எல்லா கண்டங்களில் வாழும் மனிதர்களையும் உலக சமாதான தினத்தை கொண்டாடும்படி அழைப்பு விடுக்கிறோம்.

எல்லாக் காலத்தையும் விட இன்று மனித இனமானது சமாதானத்துக்கான பாதையை மீளக்கண்டுபிடிக்க வேண்டிய ஒரு தேவையில் இருக்கிறது. இன்று போரின் அனர்த்தங்களின் நடுவில் மூன்றாயிரம் ஆண்டின் ஆரம்பத்தில் உலகெங்கும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிலும் இரத்தக் களரி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எல்லா காலத்தையும் விட சமாதானத்தின் பாதையை நாம் கண்டடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்று மனிதர்கள் எல்லோரும் சமாதானத்தில் நம்பிக்கை இழந்து போரின் முகத்திலே அதன் துயரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையில் திருச்சபையானது சமாதானத்தை போதித்துக்கொண்டு இருக்கிறது. சமாதானம் சாத்தியமானது என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது. சமாதானத்தை ஏற்படுத்துவது எமது கடமை என்பதை திரும்பத் திரும்ப அறிவிப்பதில் திருச்சபை சோர்ந்து போய் விடவில்லை.

23ஆம் அருளப்பர் பாப்பரசர்

கும் நான்கு தூண்களிலே சமாதானம் கட்டியெழுப்பபட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்கின்ற அந்த நான்கு தூண்களின் மேல்தான் சமாதானம் கட்டி எழுப்பப் பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட காரணங்களை நாம அறிவோம். எம்மைத் தொடர்ந்து வரும் மனித சமுதாயத்தை போரின் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அழைப்பு எமக்கு எப்போதும் ஒரு பெரிய அழைப்பாக இருக்கிறது. உண்மையான சமாதானத்தை உலகில் நிறுவ வேண்டுமானால் நீதியானது அன்பினால் கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டும். நீதியும் அன்பும் சிலவேளைகளில் எதிர் எதிர் சக்திகளாக அமைந்திருப்பதுபோல எமக்கு தோன்றலாம். ஆனால் உண்மையில் அவை ஒரு உண்மைத் தன்மையின் இரண்டு முகங்கள் - மனித உயிரின் ஒன்றிணைக்கப்பட வேண்டிய இரு பரிமாணங்கள்.

### மன்னிக்கும் மனம் வேண்டும்

கிறிஸ்தவர்களுக்கும் நன்மனதுள்ள அனைவருக்கும் தனி நபர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மன்னிப்பு தேவையாக இருக்கிறது.

**அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

மன்னிப்பின்றி சமாதானம் இருக்க முடியாது. பலஸ்தீனாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் நடக்கும் யுத்த நிகழ்வுகளே இப்போது என் நினைவுகளாயிருக்கின்றன. சமாதானத்தை பற்றி போதுமான அளவு கடந்தகாலம் முழுவதும் பல கோணங்களில் விளக்கம் தந்தாகிவிட்டது. இப்போது மிஞ்சியிருப்பதெல்லாம் சமாதானமாக சீவிப்பதற்கு உழைப்பதாகும். தனிநபர்களும் மனிதர்களும் சமாதானமாக ஒன்றிணைந்து வாழவேண்டும். நாம் கிறிஸ்தவர்கள். எமது மதத்தின்மையமான சமாதானத்தை எமக்கும் மற்றவர்களுக் கும் போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சமாதானத்தை போதிப்பது என்பது கிறிஸ்துவையே போதிப்பதாக இருக்கிறது. அவரின் நற்செய் தியை அறிவிப்பதென்பது சமாதானத் தின் செய்தியை அறி விப்பதாக இருக்கிறது. சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் (மத்.5:9) என்ற மலைப் பொழிவின்படி சமாதானத் தூது வர் களாக நாம் உழைக்க

### தினம்

கத்தோலிக்க திருச்சபையானது 1967ஆம் ஆண்டு 23ஆம் அருளப்பர்

திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம்

23ஆம் அருளப்பர் பாப்பரசர் உலகில் அமைதி என்ற தலைப்பில் வெளியிட்ட திருமடலில் தெரிவிக்

தூது வர் களாக நாம் உழைக்க வேண்டியிருக்கிறது - என திருத்தந்தை யின் செய்தி நிறைவடைகிறது. □

---

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர்களுடனான தமிழீழ அரசியல் துறைப்பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் சந்தி ப்பு கடந்த,சனியின்று கிளிநொச்சி நடுவப்பணியகத்தில் இடம்பெற்றது.

இதில்,இவ்வாண்டு மேற்கொள் ளப்பட வேண்டிய வேலைத்திட்டங் கள், சமகால அரசியல் நிலைமை கள் ஆகியன குறித்து ஆராயப்பட் டது. (உ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியற்றுறை மண்டபத்தில் பொன்வண்ணன் இயக்கிய **"நதிக்கரையினிலே"** என்ற தமிழ்த் திரைப்படம் காண்பிக்கப் படவுள்ளது.

இப் படம் "சந்திரகிரி ஆற்றங் கரையில்" என்ற கன்னட நாவலின் திரைவடிவமாகும்

மேற்படி திரைப்படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ. யேசுராசா, க. சட்டநாதர் ஆகியோரின் நெறிப் படுத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

ஆர்வமுள்ள எவரும் மேற்படி நிகழ்வில் பங்கு கொண்டு பயன் பெற லாமென ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப் பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந் திரன் தெரிவித்துள்ளார். (உ)

# சம்பிரதாயபு,ர்வ நிகழ்வுகள் ஏதுமின்றி பொதுநூலகத்தைப் பாவனைக்கு விடுக!

## தமிழ் பேசும் மக்களின் அமையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

2004.01.15 ஆம் திகதிக்குப் பின்பு பொருத்தமான ஒரு நாளில், யாழ்ப்பாண பொதுநூலகம் பொது மக்களதும் மாணவர்களதும் பாவ னைக்குத் திறந்திருக்கும் என ஊடகங்கள் மூலமாக அறிவித்தல் வெளியிட்டு நூலகத்தை இயங்க வைக்க வேண்டும்.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம் சார்பில் அதன் இணைப்பாளர் சி.வி. கே. சிவ ஞானம், யாழ். மாநகரசபை ஆணை யா ளர் இ.இராமலிங்கத்தை இவ் வாறு கோரியுள்ளார்.

இதுபற்றி 03.01.2004 ம் திகதி யிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதா வது,

திருத்தம் செய்து புனரமைக் கப்பட்ட யாழ்ப்பாண பொதுநூல கம், கடந்த வருட முற்பகுதியில் திறந்து வைக்கப்படவிருந்த போதும், சிலவேலைகள் பூர்த்தியடையாத தால அவ்வாறு செய்யப்படவில்லை.

எனினும், 2003.12.31 ம் திகதி யன்று எஞ்சிய வேலைகளில் அனே கமானவை பூர்த்தி செய்யப்பட்டு கட்டடம் தங்களிடம் கையளிக் கபபடுவதாக அறிவிக்கப்பட்டிருந் தது.

1981.6.1 ஆம் திகதி எரியூட்டப் பட்ட நூல் நிலையத்தின் தென் பகுதிக் கட்டடம் அந்தக் கொடூர நிகழ்வில் நினைவாக பேணப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் திருத்தம் செய்யப்படாமல் விடப் பட்டிருந்தது அதனாலேயே நூல் நிலையத்தின் மூன்றம் கட்டட மான மேற்குப் புறம் புதிதாக அமைக் கப்பட்டு 1984.6 .4 ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

1985.5.10ம் திகதியும் ஸ்ரீலங்கா அரசின் ஆயுதப்படையினரால் இந்தப் பொதுநூலகம் மீண்டும் குண்டுவைத்து தகர்த்தப்பட் டது. அதனால் நூலகம் மீண்டும் செய லிழந்தது.

அழிவின் சின்னமாக திருத்தம் செய்யப்படாது விடப்பட்ட தெற்குப் பகுதியும் திருத்தியமைக்கப்பட்டி ருப்பதை கணக்கூடியதாக உள் ளது. இது ஸ்ரீறலங்கா அரச படை களின் தமிழர் கலாசார படு கொலையை மறைக்க எடுக்கப் பட்ட திட்டமிட்ட நடவடிக்கையா கவே கருத வேண்டியுள்ளது.

எது எவ்வாறாயினும் பாரிய செலவில் அனேகமான புனரமைப்பு வேலைகள் முடிவடைந்த நிலை யில் இந்த நூலகத்தை பொது மக்களதும் மாணவ சமூகத்தின தும் பாவனைக்கு விடப்படாமை பொருத்தமானதுமல்ல, விரும் பத்தக்கதுமல்ல.

அதேவேளை,சம்பிரதாய பூர்வ மான திறப்புவிழாவொன்றை இனி எப்பொழுது மேற்கொண்டாலும் அது அரசியல் கலந்த சர்சைக்குரி யதாகவே அமையும். ஒருவகை யில் ஏற்கனவே இயங்கிய ஒரு நூலகத்திற்கு திறப்புவிழா தேவை யற்றது எனவும் கொள்ளலாம்.

எனவே பின்வரும் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு எமது அமையம் தங்களை வேண்டிக் கொள்கிறது.

லயனல் பெர்ணாண்டோ விசாரணைக்குழுவின் சிபார்சின்படி வழங்கப்படவேண்டிய மிகுதி எண் பத்தைந்து இலட்சம் ரூபா நட்ட ஈட்டை சேர்ந்த வட்டியுடன் உடன் வழங்குமாறு ஜனாதிபதி அவர் களைக் கோரவேண்டும்.


நூலக அழிப்பின் வரலாற்று நினைவகம் உருவாக்கப்பட்டு இவை தொடர்பான தகவல்களை யும்,தரவுகளையும் ஆவணங்களை யும் பேணிக் காக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

(உ)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் 'வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான மே மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4வது பாதங்கள் - திருவாதிரை 4 பாதங்கள் - புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை 9-பாதங்கள்**

இப்போது ஜன்ம சனியோடு, செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்துவிட்டனர். மூன்றில் குரு முயற்சி அதிகம் தேவைப்படுகிறது. தொழில் வகையில் சாதக பாதகங்களை ஏற்க வேண்டியவர்கள் நீங்கள் தான். சகோதர சகோதரி வகையில் சில சமயம் சலனப்போக்கு உடையவர்களாக இருப்பீர்கள். குடும்பத்தில் இது புகைச்சலாக இருக்கும். சிலர் பூர்வீக சொத்து வகையில் சில மாற்றங்களை செய்யவேண்டி இருக்கிறது. நீங்கள் உங்கள் செயல் முறையை வேகப்படுத்தவேண்டும். வரவேண்டிய பணத்துக்கு வழக்குத் தொடுப்பது, பூமி, கட்டிடம் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். சிலருக்கு இப்போது பொதுத்துறை ஈடுபாட்டினால் கௌரவப் பதவியை ஏற்பதும் விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளை அனுபவிப்பதும் உண்டாகும். அரசாங்க மனிதர்களின் அனுகூலப் போக்கினால் உங்கள் தொழில் வளர்ச்சி சிறப்பாக அமைந்து அல்லது வளர்ந்து இருக்கும். விவசாயம், காய்கறித் தொழில் செய்பவர்களுக்கு பெரிய தன ஆதாயத்தை உண்டாக்கும். குடும்பவகைக்கு நாகரீகப் பொருட்கள் சேர்ப்பது உண்டாகும். இயந்திரம் மின்கருவிகள் வாங்குவது போன்ற நன்மைகளும் இருக்கும். ஒப்பந்தத் தொழில் செய்பவர்களுக்கு தன நடமாட்டம் ஓரளவு திருப்தியாக இருக்கும். இம் மாதம் தொழில் முன்னேற்றம் தடை இருக்காது. இதனால் ஒப்பந்தம் செய்தவர்களுடன் மன வேற்றுமையும் உதயமாகும். கார், லாறி, ஆட்டோ போன்ற தொழில் உடையவர்களுக்கு தனவருவாய் அவ்வளவு சிறப்பாக இருக்கமுடியாது. தேவைக்கு கடன் வாங்குவது போன்றவை இருக்கும். குடும்பத்தில் கணவன், மனைவி உறவு திருப்தியாக இருக்கும். மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உயர்வு மற்றவர்கருத்தை கவருவதாக இருக்கத்தான் செய்யும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி மாற்றம், இடப்பெயர்ச்சி போன்றவை இருக்கும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி உயர்வு மற்றவர் கருத்தை கவருவதாக இருக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் பரிவுடன் நடக்கும். வேலையாட்களும் ஒரே சீராக செயற்படுவர். குடும்பத்தேவைகள் குறித்தபடியே பூர்த்தியாகும். இப்போது சிறு சிறு முணுமுணுப்பு இருக்கத்தான் செய்யும். காரணம் 4ல் ராகுதான். புத்திர, புத்திரியர் கல்விவகை திருப்தியாக இருக்கும் ஆரோக்கியம் பாதகமில்லை. வெளிவட்டார நட்பு மிதமானது. பழைய நட்பு மிகவும் நன்றாக இருக்கும். உத்தியோகப்பிரிவு மரியாதை, கௌரவமும் இருக்கும். தனம் கொடுக்கல் வாங்கல் திருப்தியாக வந்துகொண்டு இருக்கின்றன. கடன் பாதிபபுத்தராது குடும்பத்தில் திருமண சம்பந்தமான முயற்சி விருந்து வேடிக்கை அனுபவிப்பும் இருக்கும். கலைப்பிரிவு மனிதர்களுக்கு கலக்கமில்லாமல் தொழிலின் போக்கு இருக்கும் வரவேண்டிய தனம் உரியகாலத்தில் வந்து சேருவதால் எல்லாமே சுமுகமாக அமையும் புத்திர புத்திரியர் வகைக்கு ஆரோக்கிய பாதிப்பு, மருத்துவச் செலவும் இடம்பெறும் குடும்பஉறவில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மறைந்துவிடும்.

## கடகம்



கும். உறவினர் போக்கு ஒரு வழிப்பாதை போன்றது. நீங்கள் அவர்கள் மூலம் எந்த நன்மையும் எதிர்பார்க்க முடியாது. கடைசியில் சோர்வு ஓர் அளவு குறையும். வழக்கு, கடன் பிரச்சினைகளும் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். சத்துருக்கள் பலம் படிப்படியே குறைந்து வருவதாக இருக்கும். குடும்ப உறவில் நடக்கும் சுபவிஷயங்களில் கலந்து கொள்வது விருந்துண்பது போன்ற நன்மைகள் இருக்கும். அனுகூலத்திக்குகள் மேற்கு, தெற்கு கட்டிடம் கட்டுவது போன்ற வழியில் செலவுகள் தான் இருக்கும். புத்திரர், புத்திரியர்கள் பிற்பகுதி இக்காலம் ஓர் அளவு இணக்கமாக இருக்கும். இப்போது இனிமையான சூழ்நிலை உருவாகி வருகின்றது. பெரிய தொழில் ஒப்பந்தம் செய்வது சிலர் வெகுதூரப் பிரயாணத்தை சிறப்பாக அமைத்து இருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பச் சொத்து சம்பந்தமாக இருந்து வந்த வழக்கு வெற்றிதராது.

கின்றன. உறவினர் தொடர்பும் திருப்தியானதே. பிரயாணம் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். பழைய கட்டிடம் வாங்குவது அல்லது ஒப்பந்தம் செய்வதும் இருக்கும். தொழில் சம்பந்தமான அலைச்சல் குறையாது. சிலர் தூரதேச மனிதர்களைச் சந்திப்பதும் உண்டாகும் கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். போட்டி, பந்தையம், விளையாட்டுப் போன்றவற்றில் கலந்து கொள்வதும் உண்டாகும். பிற்பகுதியில் ஆரம்பத்தில் இருந்த மந்தநிலை அகன்றுவிடும். தொழில் வகையில் நீங்கள் துரிதப் போக்கில் இயங்குவதும் உண்டு. உங்கள் கூட்டாளிகளோ மற்றவரோ பெறாமைப்படத்தான் செய்வர் நீங்கள் கௌரவத்தைப் பார்ப்பதோடு பணவிஷயத்தையும் கவனிக்கவேண்டும். உத்தியோகப் பிரிவினர்களும் துரிதப் போக்கில் இயங்குவது மற்றவர் பாராட்ட அமையும். இப்போது பழைய கடனில் ஒரு பகுதி அடைக்கப்படுவதும் இருக்கும். புதுக்கடனும் வந்து சேரும். கலைத்துறையினருக்கு பொறுப்புகள் மிகுந்த காலமே. முதலீடு செய்வதில் சில மூத்தவர்கள் ஆலோசனை இப்போது தேவைப்படுகிறது. இதனால் அடிக்கடி பிரயாணம் செய்வதும் இருக்கும். அவசரகாரியங்களை முடித்துவிடுவீர்கள் கணவன், மனைவி உறவு சிறுசிறு பூசல்கள் இருந்தும் இன்பமாக இருக்கும். பணப்புழக்கம் திருப்தியாக இருக்கின்றன பழைய வாகனம் இதர பொருட்களும் வாங்கும் மாதம்.

# உங்களுக்கு எப்படி?

## சிம்மம்



**மகம் 4 பாதங்கள் - பூரம் 4 பாதங்கள் - உத்தரம் 1வது பாதம் வரை - 9 பாதங்கள்**

உங்கள் ஆட்சி கிரகம் சூரியன் உச்சம் பெற்று ராகுஉடன் இருப்பது எதிர்பாராத நன்மைக்கு வழியாகும். பட்டாடைகள், ஆபரணச் சேர்க்கையும் உண்டாக்கும். அரசாங்க உயர் அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகளும் நட்பு உடையவர்களாக விளங்குவர் கிரக அமைப்பு சீராக அமைந்து இருப்பதால் சில சிக்கலான பிரச்சினைகளும் எளிதில் நீங்கும். பாராட்டுக்களைப் பெறக்கூடியவர்களாக இருப்பீர்கள். பெண்கள் கலைப்பிரிவினர்களால் சில நன்மைகள் இருக்கின்றன. தலைவரவு அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்பத்தில் சுபவிஷயம் குறித்து பேசுதல், கடிதத்தொடர்பும், கௌரவம் முக்கிய அங்கம் வகிக்கும். வழக்கு, கடன் பிரச்சினைகள் இருந்தும் வேகமில்லாமல் இருக்கின்றது. பழைய நண்பர்கள் மூலம் பயனுள்ள தகவல்களைப் பெறுவதும் வரும். பகைத்துக் கொண்டவர்கள் இப்போது நட்பாக விளங்குவர். சொத்துவகை சிக்கலைத் தீர்ப்பதும குறிப்பிடத்தக்கது. தேக ஆரோக்கியம் நன்றாகவே இருக்கும். பழைய நன்பர்கள் மூலம் பயனுள்ள தகவல்களைப் பெறுவதும் இருக்கும் மேலும் சனி ஒருவனே அனுகூலமானவன். பணம் வரும்; கூடவே செலவும் சிக்கலைத் தீர்ப்பதும் குறிப்பிடத்தக்கது. தேக ஆரோக்கியம் நன்றாகவே இருக்கிறது. பெரிய பலன் ஏதும் இல்லை. அரசாங்க மூலத்தில் எதிர்பார்த்த உத்தரவு இப்போது அனுகூலமாகவே இருக்கிறது. உங்கள் அவசரப் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணலாம். சனி இப்போது பலமற்றவன் இனி எவ்வித சிரமமும் செய்ய முடியாதவனாகும். கடந்த மாதத்தைவிட இது முன்னேற்றமான காலம் என்பதில் சந்தேகமில்லை. கடன், வழக்கு இருப்பவர்களும் இந்தப் பிரிவில் உண்டு ஆனால் பாதிப்புக்கொடுக்காது. உங்கள் எண்ணம் முயற்சிகளுக்கு வெற்றி நிச்சியம் இருக்கிறது. காரணம் யோக கிரகமான செவ்வாய் சுயஷேத்திரம் பெற்றிருக்கிறான். உடல் உஷ்ணத்தை தவிர்க்கவேண்டும். கூட்டுத்தொழில் உள்ளவர்கள் முன்பு இருந்த கருத்து வேறுபாட்டை அகற்றிவிடலாம். உத்தியோகப்பிரிவினர்களுக்கும் இதே பலன்களே இருக்கும் என்றாலும், தூக்கமின்மையை செய்வதையும் தவிர்க்கமாட்டான். புதன்

பெண்களுக்கு பட்டு உடைகள் சேர்க்கையும் உன்டாகும் உத்தியோகப் பிரிவினருக்கு இடமாற்றம், இலாகா மாற்றம் போன்றவை உன்டாகும். மனதிருப்தி அளிக்கும் காலமே. புண்ணியஸ்தல பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கும் சிலர் இடம் மாறுதல் செய்தொழில் அமைத்தல், கூட்டு முயற்சியில் ஆதாயமும் உன்டாகும். கொடுக்கல் வாங்கலில் மிதமான போக்குதான் இருக்கும். பழைய நண்பர்களை சந்தித்து புதிய திட்டங்களைப் பற்றி விளக்குவது அவசியமாக இருக்கும் கூட்டுத்தொழில் உயர்வு உண்டு உறவினர்களும், நண்பர்களும் பாராட்டாமல் இருக்கமுடியாது. பழைய கட்டடத்தை புதுப்பித்தல், புதிய கட்டிடம் கட்டிமுடித்தல் போன்றவையும் இருக்கும் சிலர் இப்போது அயல் நாடு சென்று வருதல் அதிநாகரீகப் பொருட்களைக் கொண்டு வருவது போன்றவையும் இருக்கும் அரசாங்க மூலமாக எழுத்து வகை ஆதாரம் மட்டும் கிடைக்க சற்று கால தாமதமாகலாம் இபபோது சனி 12ல் இருப்பதே இதற்குக் காரணமாக அமைந்து விட்டது என்பது கவனிக்க வேண்டிய ஒன்று இப்பிரிவு உத்தியோக ஆண், பெண்களுக்கு உபகை அளிக்கும். சில நற்பலன்களும் உண்டு அவை காதல், கலியாணம் வழியில் வெற்றி அடைவது என்பது தான் இப்போது சில நல்ல நண்பரையும் பெறுவீர்கள்.

## துலாம்



**சித்திரை 3,4வது பாதம்-சுவாதி 4பாதங்கள்-விசாகம் 1,2,3 பாதங்கள் வரை 9பாதங்கள்**

கணவன், மனைவி உறவு திப்தியானதே. கொடுக்கல் வாங்கலில் தாரளப் போக்கையும் பெறுவீர்கள் புது உடைகள் செயற்கை, பழைய ஆபரணம மாற்றி அமைத்தல் அததனையும் உண்டு. மூத்தவர்களிடமும் உறவு வகையினரிடமும் முன் யோசனையுடன் பேசவேண்டும் குடும்பத்தில் குழந்தைகள்வகை மருத்துவச் செலவு இருக்கும் பிரயாணம் குறித்தபடி இருக்காது, கணவன், மனைவி உறவு மிதப்போக்கு உடையதாக இருக்கும் புத்திர, புத்திரியர்கள் கல்வி ஆரோக்கியம் வாகன வகையில் செவுகள் இருக்கின்றன. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் அதிகாரிகள் மூலம் சில அச்சுறுத்தல் இருக்கும். தன்மீது தவறு வராமல் காத்துக் கொள்ள பாதையை விட்டு சற்று விலகிச் செல்கிறீர் இதற்குக் க்ாரணம் உடனிருக்கும் மனிதர்களே. இந்த நேரத்தல் உங்களுடைய இரகசியம் தெரிந்தவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.



**புனர்பூசம் 4வது பாதம் - பூசம் 4 பாதங்கள் - ஆயிலியம் 4 பாதங்கள் வரை - 9 பாதங்கள்**

சகோதர, சகோதரி வகையில் சுபச் செலவுகள் இடம்பெறும் தேக ஆரோக்கியம் தெளிவடைந்துவிடும். தேடிப்போக வேண்டிய நண்பர் இப்போது உங்களை வந்து சந்திப்பர். தாய்வழி உறவில் சுபச்செலவுகள் இடம்பெறுவது நிற்காது. பிரயாணம் மூலம் பெருமை சேரும் உங்கள் தொழில் வகையில் நல்ல முன்னேற்றத்தையும் இப்போது பெறுவீர்கள். தனநிலை தெளிவாகவே இருக்கின்றன. சிவந்த நிற பட்டாடை சித்தியும் சேரும் காலம். கணவன், மனைவி உறவில் கண்ணியப் போக்கு நிறைந்திருக்கும். உறவினர் முன்பு பிரிந்திருந்தவர் இப்போது மீண்டும் வந்துசேருவர். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் அதிகாரிகளால வருதுகிடைக்கும். பழைய நண்பர்கள் சந்திப்பு, புதிய உறவு பலன் கொடுக்கவே ஏற்படுவதற்கு வழி வகுக்கும். போட்டி, பந்தையம், பரிசு போன்றவை இடைஇடையே பலன் கொடுக்கவேசெய்யும் நீங்கள் வெற்றி பெறுவீர்க்ள், காரிய சாதனை என்பது குறைவுதான். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட இடைவெளி சற்றுக்குறையும், மற்ற நண்பர்களின் போக்கு இப்போது உங்களையும் பாதிக்கும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிட்டுவிட்டு பிறகு மற்றவர்கள் வார்த்தைக்கு ஆளாகவேண்டி இருக்கும். குடும்ப உறவில் தாமதப்பட்ட திருமணம் இப்போது கூடிவரும். பிரச்சினையை சந்திப்பதும் நாகரீக வாகன வகையிலும் செலவுகள் தவிர்க்கமுடியாது. நல்ல சமயத்தில் நண்பர் சிலர் கை கொடுப்பர் உங்கள் நாகரீக வாகன வகையிலும் செலவுகள் இருக்கும். கணவன், மனைவி இடையே சிறு பூசலும் உண்டாகும். குடும்பத்தில் மூத்தவர்கள் வகை மருத்துவச் செலவுகள் இடம் பெறுவதும் இருக்கும் வாகன மாற்றம் அல்லது பழுது செலவும் இடம்பெறக்கூடும். குடும்பத்தில் கணவன், மனைவி உறவு நன்றாக இருப்பதாக சொல்ல முடியாது. பிணக்கு தோன்றத்தான் செய்யும். பெண்கள் மூலம் சில கெளரவக் குறைவான. பேச்சுக்கூட உண்டா

இருப்பது தெய்வவழிபாடு ருதல பிரயாணம் நல்ல திகதிகளில் சென்று நியாயமான காரியங்களை முடிக்கவும், விருந்துக்குப் போகும் இடங்களில் வெட்டிப்பேச்சைத் தவிர்க்கவும். வடக்கு, வடமேற்குத்திக்கு நண்பர்கள் வெகுவாக நன்மையைச் செய்பவர்களே. திடீர் பிரயாணம் இலலாமல் இல்லை. சிலர் இயந்திரம் வாகனம் வாங்குவதும் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம், கல்வி வகைகள் திருப்தியாக இருக்கின்றன. குடும்ப சொத்து சம்பந்தமாகச் செய்யும் முயற்சிகளில் வெற்றி இருக்கின்றன. வழக்கும், கடனும் வீரமழிந்து காணப்படுகின்றன. தைரியமாகச் செயற்படுங்கள். வெற்றி உங்கள் பக்கம்தான். செய்தொழில் வகையில் உங்களுக்கு எதிர் சவாலாக இருந்தவர்களையும் இப்போது காணவில்லை. அவர்கள் மறைந்து விடுவர். நீங்கள் எதையும் யோசிக்காமல் செய்யமாட்டீர்கள் இப்போதும் அதனை உங்கள் கோணத்திற்கு திருப்பிப் பார்ப்பதே சிறந்தது. அத்த வகையில் நீங்கள் ஆரம்பத்தில் செய்த தொழில் வழி பிரகாசமான நிலையை பெற்றிடும். நண்பர்கள் இல்லத்திற்கு விருந்தினராகச் செல்வீர்கள் நாகரீக வாகனம் வாங்குவது போன்ற நன்மைகளும் இருக்கின்றன.

## கன்னி



**உத்திரம் 2,3,4 வது பாதம் வரை - அத்தம் 4 பாதங்கள் - சித்திரை 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

தமிழ் புதுவருடம் பிறந்து விட்டது. தலையாயக் கோள் சூரியன் 8ல் ராகுவோடு சேர்ந்து இருக்கிறது. நண்பர்களை சந்திக்கும் வாய்ப்பும் சிலர் ஒப்பந்தம் செய்வதும் உண்டாகும். இப்பிரிவு மாணவ, மாணவியர்களுக்கு கல்வி சிறப்பாக இருக்கும் சிலர் அயல் நாடும் செல்வதும் கூட முக்கிம் வாய்ந்ததாக இருக்கும். செய்தொழிலில் மற்றவர் குறுக்கீடு மனச்சலனத்தை உண்டாக்கும். இதனால் உடனிருப்பவர் அல்லது கூட்டு மனிதர்களிடம் கருத்து மோதல் இருக்கும். பண நெருக்கடி இருக்கமுடியாது அவை இயல்பாக இருக்

மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தொழிலைப் பொறுத்தவரை இந்த நேரம் இதே நிலைதான். சொன்ன சொல்லைக் காப்பாற்றிக் கொண்டு எல்லோருடைய நன்மதிப்பையும் பெறுவீர்கள் காசுகொடுத்து ஆகவேண்டிய காரியங்களை பேச்சு புத்திசாதுரியத்தினால் முடித்து நல்ல பெயரைப் பெறுவீர்கள். நண்பர்கள் எப்போதும் உங்களை சுற்றியே இருப்பார்கள். விருந்தினர் வருகை, சுபகாரியங்களில் கலந்துகொள்ளுதல். புதிய நகை, துணிமணிகள் வாங்குவது போன்றவை உண்டாகும். மற்றும் செவ்வாய நேரில் வராத எதிரிகளையும் உண்டாக்கத் தக்கவன். குருபார்வைதான் உங்களைத் தக்கசமயத்தில் காப்பாற்ற வேண்டும் சிலர் வாகனத்தில் செல்லும் போது மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இது விபத்தையும் உண்டாக்கும் நேரம். எதிர்பார்த்த பணம் குறித்த காலத்தில் வராமையினால் உங்கள் தொழிலும் பாதிக்கக்கூடும். கூட்டுத்தொழில் உள்ளவர்களாக இருத்தல் மட்டும் பெரியபாதிப்பாக இருக்காது. கட்டுமான வேலைகள் ருதம்பித்து நிற்கும். உங்கள் சொந்த நலனைக் கருத்தில் கொண்டு சிலவகை ஈடுபாட்டில் நீங்கள் விலகியிருப்பது அவசியம். மற்றவர் உங்களையும் உங்கள் ஆதிக்கத்தையும் பயன்படுத்தி நன்மை அடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. சுக்கிரன் இப்போது தன இல்லத்திற்கு சென்றுவிட்டான். சனிசுக்கர சாரத்தில் சென்று கொண்டு இருப்பதால் இப்போது உங்களுக்கு வரவேண்டிய தொகையில் ஒரு பகுதி வந்து சேரும் பூமி, வீடுபோன்றவை வாங்குவதும் உண்டாகும் அரசாங்க மனிதர்களிடமும் விலகியிருக்கவேண்டியும் இருக்கும். எவ்வளவு முயன்றாலும் வதி என்பது விடாது. பணச்செலவை உண்டாக்கவே செயயும என்றாலும், இதுகுறித்து ஏற்படும் சலனத்தை அறவே போக்கிவிடவேண்டும். இதனால் தற்போது நடைமுறையில் உள்ள நன்மைகள் பாதிக்கக்கூடும் நாகரீக வாகனச் செலவு வழக்கு செலவும் கூட இருக்கத்தான் செய்யும் நண்பர்கள் போக்கு இக்காலம்.

(தொடரும்)

**சோதிடமேதை ராமன்**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

### மதுவை மறக்கலாம்

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதத்தில் சாதனை செய்ய வேண்டும் என்று ஆசை இருக்கும். ஒருத்தருக்கு சாராயம் குடிப்பதில் சாதனை செய்யவேண்டும் என்று ஆசை! என் அளவுக்கு யாரும் குடிக்க முடியாது என்று சவால் விட்டார்.

ஒரு சாராயக் கடையில் போய் நின்றுகொண்டு அவர் பாட்டிற்கு வாங்கிக் குடித்துக்கொண்டே இருந்தார். ஒரு அளவிற்கு மேல் சென்றதும் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. நிதானம் தவறிவிட்டது. அப்படியிருந்தும் இன்னொரு கிளாஸ் கொடு என்று வாங்கினார். எப்படியும் அதைக் குடித்துமுடித்துவிடலாம் என்று முயற்சி செய்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. பக்கத்தில் நின்றவரிடம் "எனது வாய் எங்கே இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் பார்த்துக் கூறுங்கள். இந்தச் சாராயத்தை அதில் ஊற்றவேண்டும்" என்றார்.

உடனே அந்த ஆள் " இது என்ன கேள்வி? உங்கள் வாய் உங்களது தலையில் தான் இருக்கின்றது" என்றார். உடனே இவர் "ஓ... அப்படியா விஷயம்... கண்டு பிடித்துக் கூறியதற்கு நன்றி" எனக் கூறிவிட்டு அந்தச் சாராயத்தை அப்படியே தலையில் ஊற்றினாராம்.

தலையில்தான் வாய் உள்ளதென்று கூறினார் என்று அங்கே ஊற்றிக்கொண்டார். அதுமட்டுமல்லாமல் அப் பாடா... குடித்தாயிற்று. இன்னுமொரு கிளாஸ் கொடு என்றும் கேட்க ஆரம்பித்தார். எப்படியிருக்கிறது கதை? இது கதையில்லை! உண்மையில் நடக்கக்கூடிய விஷயம்தான்.

இப்படிப்பட்ட ஆள் ஒருவரை எனக்குத் தெரியும்! அவர் திடீரென்று ஒருநாள் என்னிடம் வந்து சார்... இப்போது நான் மதுப் பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டேன் என்றார். "அது எப்படி உங்களால் முடிந்தது? " என்று கேட்டேன். அவருக்கு யாரோ ஒருவர் அறிவுரை செய்தாராம். ஒருசில நல்ல பழக்கங்களை வழக்கத்தில் கொண்டு வந்து விட்டால் மதுவை மறந்து விடலாம் என்று அதுபோலவே செய்தாராம். இப்போது சாராயக் கடைப் பக்கமே செல்வதில்லையாம்.

அது என்ன அந்த நல்ல பழக்கம் கூறுங்கள் மற்ற வர்களுக்கும் உபயோகப்படும் என்றேன். அவர் ஒவ்வொன்றாகக் கூறினார். பத்துவிடயங்கள். அவை என்னென்ன தெரியுமா? தினமும் காலையில் இளஞ் சூடான நீரில் பழச்சாறு கலந்து சாப்பிட்டு வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமாம். தினமும் இருவேளை குளிக்கவேண்டும். ஒவ்வொரு முறையும் குளித்தவுடன் வெந்நீர் அல்லது எலுமிச்சை ஜூஸ் குடிக்கவேண்டும்.

ஒருவேளை உணவுக்கும் இன்னொருவேளை உணவுக்கும் இடையில் 8 இல் இருந்து 10 கிளாஸ் தண்ணீர் குடிக்கவேண்டும். சில குறிப்பிட்ட இடங்களில் உட்கார்ந்தால் கொஞ்சம் மது அருந்தலாமா என்று தோன்றும். சாப்பிட்ட பின் அதுபோன்ற இடங்களில் அமரக்கூடாது. சாப்பிட்டவுடன் வெளியே சென்று 5 நிமிடம் நடந்துவிட்டு வரவேண்டும்.

சில நண்பர்களின் வீட்டிற்குச் சென்றால் உடனே மதுக்கிளாஸை எடுத்து நீட்டுவார்கள். அது ஒரு உபசரிப்பு. அப்படியான நண்பர்களின் வீட்டிற்குச் செல்லக்கூடாது. மது அருந்தும் இடங்களுக்குச் செல்லக்கூடாது. திடீரென்று ஒரு எண்ணம் வந்துவிட்டதென்று

# அரசியல் சாணக்கியம் சிறிதுமின்றி செயற்படுகின்றது ஐ.தே.க. அரசு

## குற்றம் சாட்டுகிறார் பட்டி

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் மேடையில் ஐக்கிய தேசியக் கட்சி ராஜதந்திரம் அற்ற முறையில் நடந்து கொள்வதாக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டிவீரக்கோன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுபற்றி மேலும் கருத்து வெளியிட்டுள்ள பட்டி வீரக்கோன்,

இலங்கையின் அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் நிறைவேற்றுஅதிகாரம் மட்டுமல்லாது சட்டவாக்க அதிகாரமும் ஜனாதிபதிக்கு உள்ளது.

இதனால் இவற்றுக்குத் தலைமையாகவுள்ள ஜனாதிபதியே அமைச்சரவைக்கும் தலைமை வகிக்க வேண் டும்.

ஆனால், இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரசியல் யாப்பு ரீதியாகவும் அரசியல் அதிகார ரீதியாகவும் ஜனாதிபதிக்குள்ள உரிமைகளை வழங்கத் தவறியதன் விளைவே அரசியல் குழப்ப நிலைக்குக் காரணம்.

சமாதான முயற்சிகளில் பிரதமர் தன்னை ஈடுபடுத்த தவறும் பட்சத்தில் சமாதான முன்னெடுப்புக் களைத் தொடரும் பொறுப்பு ஜனாதிபதி வசமாவது தவிர்க்க முடியாததாகிப் போய்விடும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-4)

# சிறுபிள்ளைத் தனமாகப் பேசி அரசியலைக் குழப்புகிறது ஜே.வி.பி.

## அமைச்சர் பிரேமகுமார ஆதங்கம்

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விலகுவாரானால் பிரதமர் பதவியிலிருந்தும் அவர் விலகவேண்டும் என்ற மக்கள் விடுதலை முன்னணியின் கூற்று சிறுபிள்ளைத்தனமானது என விவசாய தொழில்நுட்ப பயிர்ச்செய்கை செயற்றிறன் அமைச்சர் பிரேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், " போர் நிறுத்த உடன் படிக்கையில் இருந்து விலகப் போவதாக பிரதமர் கூறியுள்ளதனால் அவர் பிரதமர் பதவியில் இருந்தும் விலக வேண்டும்" எனத் தெரிவித்திருந்தமை தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

மக்கள் விடுதலை முன்னணியின் இத்தகைய சிறுபிள்ளைத் தனமான கதைகளினால் மக்கள் மத்தியில் அவர்கள் கேளிக்கைக்குறியவர்களாக மாறிவருகின்றார்கள்.

அத்துடன், ஆழமாகச் சிந்தித்து கருத்துக்களை வெளியிடாது வாயில் வந்தபடி வார்த்தைகளை இவர்கள் பிரயோகிக்கின்றமையினால் அரசியலில் கூட சில பாதக விளைவுகள் ஏற்படலாம் என்றார். (உ-61,10)

## இராசிபலன்

**11 .01. 2004**

**(மார்கழி 27, ஞாயிற்றுக்கிழமை)**

| | | |
|---|---|---|
| சதுர்த்தி | முன்னிரவு | 11.52 வரை |
| மகம் | முன்னிரவு | 9.00 வரை |
| இராகுகாலம் | 5.03-6.33 | மணிவரை |
| சுபநேரம் | 9.33-11.03 | மணிவரை |

சங்கடகர சதுர்த்தி விரதம்.

கெர்ப்போட்ட முடிபு

**மேடம்**

சிறுவியாதி, காரிய தாமதம், மனச்சோர்வு போசன சுகக் குறைவு.

**இடபம்**

தெய்வசிந்தை, வேலையில் ஆர்வம், காரிய தாமதம், மனப் பதற்றம்.

**மிதுனம்**

எடுத்த காரியம் கைகூடும், தன வரவு, பிறர் உதவி, கீர்த்தி.

**கடகம்**

**மன்னார் வெகுஜன அமைப்புக்கள்**

## மகேஸ்வரனின் துணிச்சலை பாராட்டிக் கடிதம்

(மன்னார்)

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிடம் இந்துகலாசார அமைச்சர் மகேஸ்வரன் விடுத்துள்ள கோரிக்கையை மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பாராட்டியுள்ளது.

இது தொடர்பில் மேற்படி ஒன்றியம் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

தாங்கள் ஐக்கிய தேசிய முன்னணியில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்து கொண்டு மிகவும் துணிச்சலுடன் எந்த எதிர்ப்பின் விளைவுகளையும் பொருட்டாக எடுக்காமல் துணிந்து அமெரிக்க தூதரக பிரதிநிதியை தங்களது அமைச்சு காரியாலயத்துக்கு அழைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும், தமிழீழ மக்களின் அபிலாஷைகள் நிறைவேற அரசுக்கும் ஜனாதிபதிக்கும் மேலும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் பேசியதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

மாற்றுத் தமிழ் குழுக்களின் பாராளுமன்ற உறுப்பினர்களோ தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இப்படியான நடவடிக்கைகளை எடுக்காத நிலையில் தாங்கள் துணிச்சலுடன் இப்படி

வையுங்கள். உடனே என்ன செய்யவேண்டுமென்றால் மீண்டும் குளிக்கவேண்டும். தேநீர், புகையிலை, வாசனைத் திரவியங்கள், இனிப்பு வகைகள் , மீன், பொரித்த உணவுகள் போன்றவற்றைத் தவிர்த்துவிட வேண்டும்.

புரதச்சத்து அதிகமுள்ள ஆகாரம், பழம், பால், தயிர், தேன், பழச்சாறு, காய்கறிகள் போன்றவற்றை அதிக மாகச் சாப்பிடலாம். தியானம், யோகாசனம் போன்றவை மிக்க உதவியாக இருக்கும். இழந்த தேக பலத்தையும் மன பலத்தையும் இதன்மூலம் மீட்கலாம். மதுப் பழக்கத்தில் இருந்து மீள்வதற்கு இது ஒரு நல்ல வழியாம்.

ஒரு விருந்து நடந்து கொண்டிருந்தது. அதிலே ஒருவர் இன்னொருவரிடம் ஒரு கிளாஸ் மதுவைக் கொடுத்து குடிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார். ஆனால் அவர் முடியவே முடியாது என்று மறுத்துக்கொண்டிருந்தார். ''சார் இப்படி மது அருந்தச் சொல்லி என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். இதை வேண்டாமென்று மறுப்பதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. முதல் காரணம் மது உட்கொள்ளுவது கெடுதல் என்று ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன். இரண்டாவது காரணம் நான் மது குடிப்பதில்லை என்று எனது மனைவிக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கின்றேன். மூன்றாவது காரணம் இப்போது நான் மது குடித்திருக்கிறேன்'' என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

விதண்டாவாதம், அதிக செலவு, முயற்சி கைகூடும், தொழில் நன்மை.

**சிங்கம்**

போசன சுகம், பிறர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், திடீர் நன்மை.

**கன்னி**

அமைதிக் குறைவு, பிரயாண கஷ்டம், முயற்சி தாமதம், பணவிரயம்.

**துலாம்**

தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, புதிய சிந்தை, ஆரோக்கியம்.

**விருச்சிகம்**

அதிகாரம், சுபநிகழ்வு, நல்ல முயற்சி, வரவேற்பு.

**தனுசு**

புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, காரிய தாமதம், ரோக பயம்.

**மகரம்**

பிறருக்குதவுதல், போசன நன்மை, வாகன பயம், முயற்சி தாமதம்.

**கும்பம்**

களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும் தனலாபம், செல்வாக்கு.

**மீனம்**

மனமகிழ்ச்சி, அதிக பிரயாசை, முயற்சி பலிதம், உடல் நலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

பகிரங்கமாக வேண்டியதை தமிழ் மக்கள் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள்.

எமது மன்னார் மாவட்ட மக்கள் சார்பாக தங்களுக்கு எமது மனமார்ந்த பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரியத்தருகிறோம்.

இதுபோல் தாங்கள் இன்னும் மென்மேலும் பல நல்ல காரியங்களை எமது தமிழீழ மக்களுக்காக துணிந்து நின்று செயலாற்றுவீர்கள் என்று நம்பி எமது உளமார்ந்த பாராட்டையும் ஊக்குவிப்பையும் தந்து இதுபோன்ற காரியங்களுக்கு நாம் தங்களுக்கு பக்க பலமாக தங்களின் பின்னே அணி திரள்வோம் என்று உறுதி கூறி நிற்கின்றோம்.என்று குறிப்பிடப பட்டுள்ளது. (உ)

## வீரமணி ஐயரின் திருவுருவப் படம் நல்லை ஆதீனத்தில் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

மகாவித்துவான் அமரர் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் இரங்கல் கூட்டமும், திருவுருவப்படத்திரை நீக்கமும் நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை இணுவில் அண்ணா தொழிலக உரிமையாளர் பொ. நடராசா, மற்றும் இணுவில் சமூக சேவையாளர் து. சிவராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அமரரின் திருவுருவப் படத்தினை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன 2வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சார்ய சுவாமிகள் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அருள்உரைகளை நல்லை ஆதீன முதல்வர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்பேராசிரியர் எஸ். மோகனதாஸ், முன்னாள்மாவட்ட நீதிபதி ஏகநாதன், பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் உட்பட பலர் நிகழ்த்தினர். தொடர்ந்து இதய அஞ்சலி உரைகள், நடன அரங்கேற்றம் என்பனவும் நடைபெற்றன. (ச-7)

### தமிழர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுள்ள போதும்

# ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது

## ஹிஸ்புல்லா எம்.பி.செவ்வி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனக் கூறுவது ஜனநாயக நாட்டில் பொருந்தமற்றதாக இருந்தாலும் தமிழ் மக்களின் அதிகப் பட்ச ஆதரவை, செல்வாக்கை பெற்றவர்கள் புலிகள் என்பதை யாரும் மறுக்கமுடியாது என,

தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிஸ்புல்லா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

வடக்கு- கிழக்கு மாகாணத்திலே பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்.( வரதர் அணி), புளொட், ஈ.பி.டி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி எனப் பல இருக்கின்ற போதும் தமிழீழ விடுதலை புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனக் கூறும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே அதிக பட்ச ஆதரவு இருக்கின்றது.

இதில் இருந்து மக்களின் உரிமைகளுக்காக யார் குரல் கொடுக்கிறார்களோ அவர்களையே மக்கள் ஆதரிப்பார்கள் என்ற உண்மை விளங்குகின்றது.

எனவே தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளும் மக்களின் உரிமைகளுக்காக ஒன்றிணைந்து ஒருமித்து குரல் கொடுக்கவேண்டும்.

தற்போது ஜே.வி.பியுடன் கூட்டச் சேர்வது குறித்து ஜனாதிபதி பேசி வருகிறார். இதனை பல தமிழ் கட்சிகள் கண்டும் காணாததுமாக இருக்கின்றன. ஜே.வி.பியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச் சேர்வது குறித்து நாங்கள் தான் அதிகம் கவலை அடைகிறோம்.

காரணம் ஜே.வி.பி. தீவிரவாதப் போக்குடைய ஒரு கட்சியாகும். தமிழ் மக்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் இனவாதக் கட்சிகளில் இதுவும் ஒன்று.

இதனால் நாம் ஜனாதிபதியிடம் இது பற்றி பல தடவைகள் கதைத்திருக்கின்றோம். தற்போது கூட இவ் விடயம் தொடர்பாக பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம்.

அவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி கூட்டுச் சேரும் பட்சத்தில் இன ரீதியாக தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படும் போது அல்லது, இடைக்கால நிர்வாக சபையொன்றை வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அமைக்கும் போது அதற்கு ஜே.வி.பி எந்த வகையிலும் தடையாக இருக்கக் கூடாது என்பதையும் ஜனாதிபதிக்கு கூறிவந்துள்ளோம்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுக்கவே சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புக்களை, அவர்களின் அபிலாஷைகளை களைந்து எறிவதாகவே அமைகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் பிரதமரே கைச்சாத்திட்டு அவரே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி விட்டு தற்போது ஜனாதிபதியை சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு கூறுவது நியாயமற்றது.

எனவே பிரதமரே தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் அவரே புலிகளுடன் பேசவேண்டும். அதற்குச் சகல கட்சிகளும் ஆதரவளிக்கவேண்டும்.

இதே சமயம் பிரதமர் குறிப்பிட்டது போல புரிந்துணர்வு ஒப்பந்தம் திருத்தியமைக்கப்படவேண்டும். ஏனெனில், அதில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இவை தவிர பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட 3 அமைச்சுக்களை ஜனாதிபதி பறித்தமையினால் தான் சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லமுடியாதிருப்பதாக பிரதமர் கூறிவருவதும் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாகும்.

அத்துடன் ஜனாதிபதி சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காகவே இவ்வாறு செய்தார் எனறும் பிரதமர் கூறுவதையும் நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

சர்வ அதிகாரமும் நிறைந்த ஜனாதிபதியிடமே பாதுகாப்பு அமைச்சு இருக்கவேண்டும். ஆனால் ஜனாதிபதி அதனைப் பிரதமரின் பொறுப்பிலேயே விட்டு விட்டிருந்தார். இதனால் ஜனாதிபதி தனது பூரண அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு பிரதமரிடம் இருந்த பாதுகாப்பு அமைச்சு முட்டுக்கட்டையாக இருந்தது. இதே சமயம் உயர் நீதி மன்றமும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இருக்கவேண்டும் என தீர்ப்பளித்தது.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சை மட்டும் ஜனாதிபதி எடுத்திருக்கலாம்தானே ஏன் உள்துறை அமைச்சையும் தொடாபாடல் அமைச்சையும் அவர் பறித்தார்? என்ற கேள்வியும் தற்போது பலரால் கேட்கப்படுகின்றது.

உண்மையிலேயே பாதுகாப்பு அமைச்சின் கீழேதான் உள்துறை அமைச்சும் மக்கள் தொடர்பாடல் அமைச்சும் இருந்தது. எனவேதான், பாதுகாப்பு அமைச்சுடன் அதன்கீழ் இருந்த இவ்விரு அமைச்சுக்களையும் ஜனாதிபதி தான் எடுத்துக் கொண்டார் என்றார். (உ-60,10)

### நிகழ்ச்சி நிரல் பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுச் செயற்பாட்டுப் பொறுப்பு ஆசிரியர்களுக்கான இவ் வருட நிகழ்ச்சி நிரல் சம்பந்தமான கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன.

இந்த வகையில் கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர்க் கேட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையிலும் நடைபெறவுள்ளது.

(உ-3,7)

## மீளக்குடியமர அனுமதி மறுத்தால் சாகும்வரை உண்ணாவிரதம்

### தென்மராட்சிவாசி பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர வழிவகை செய்யப் படாவிட்டால் இலங்கையின் சுதந்திர தினத்தன்று தொடக்கம் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப் போவதாக சாவகச்சேரி மறவன்புலோ

தமது சொந்த வீடுகளில் மீளக் குடியமர முடியாமல் சொல்லொணாக் கஷ்டங்கள் அனுபவித்து வருகின்றனர்.

இதுபற்றி அரசாங்கத்திற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் எத்தனையோ தடவைகள் முறைப்பாடு செய்தும் இற்றை வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

04.02.2004ஆம் திகதி தொடக்கம் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்வேன் என்பதை தங்களுக்கும் உலகத்திற்கும் தெரிவித்துக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

### சம்பள உயர்வுச்

## கல்வித்துறை பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது

### ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மக்கள் சேவையில் முன்னோடிகளாகத் திகழ்ந்த எமது பெரியோர்களைப் பற்றி எமது நாட்டின் சிறுவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டு கோள்விடுத்துள் ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற டி.பி.லங்கரட்ண ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில்

திற்கு எதிராக உரிய முறையில் போராட்டங்களை முன்னெடுத்தச் செல்லவில்லை என்பதாலேயே நான் விலக வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் 60,70 இலட்சங்களுக்காக கட்சியை மாற்றிக் கொள்கின்றனர். இவர்களுடன் ஒப்பிடுகையில் லங்க ரட்ண போன்ற தலைவர்

திக சாவகச்சேரி மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக நிலையத் தலைவர் செல்லக்கிளி ஆனந்த ராஜன் என்பவர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

06.01.2004 திகதியிட்டு இது குறித்து பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி ஆகியவற்றி லிருந்து 12.12.99 இல் யுத்த நிலை காரணமாக இடம் பெயர்ந்த 600 குடும்பங்கள் இற்றைவரை எடுக்கப்படவில்லை.

இவ்விதம் இடம்பெயர்ந்த 600 குடும்பத்தினரையும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற உடனடியாக அனுமதிப்பதுடன் இப்பகுதியிலுள்ள இரண்டு பாட சாலைகளையும் மீளத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

31.01.2004ஆம் திகதிக்கு முன் இம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனு மதிக்க வேண்டும்.

இவ்விதம் செய்யத் தவறினால் இலங்கையின் சுதந்திர தினமான

## சுற்றறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள், அதிபர்கள் மற் றும் கல்விப் பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்புக் குறித்த சுற்று நிருபம் யாழ்.குடாநாட்டில் உள்ள 5 கல்வி வலயங்களுக்கும் அனு ப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான ஆயிரத்து 250 ரூபா சம்பள அதிகரிப்பு இம் மாதம் முதல் அமுலுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-7)

கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்குவதற்கு முன்னோடி யாக இருந்த லங்க ரட்ணாவோடு நான் இணைந்து செயற்பட முடி வெடுத்தமைக்கு சுதந்திரக் கட்சிக் கும் எனக்கும் இடையே நிலவி வந்த விரோதம் காரணம் அல்ல.

அப்போது இருந்த அரசாங்கத் லங்க ரட்ண போன்ற தலைவர் கள் கட்சி மாறியது நாட்டு மக்க ளின் நன்மைக்காகவே.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தபோது நாட்டின் கல்வித்துறை வீழ்ச்சி யடைந்திருந்தது. எனது அரசாங் கம் கல்வி நடவடிக்கைகளை மேல் நிலைப்படுத்த தக்க நட வடிக்கை எடுத்த போதிலும் கடந்த 2 ஆண்டுகளுக்குள் கல்வித் துறை மீண்டும் வீழ்ச்சியடைந்து செல்கின்றது எனச் சுட்டிக் காட்டி யுள்ளார். (உ-61,8)

### வட- கிழக்கில் இவ்வாண்டு

# 800 கோடி ரூபா செலவில் மூன்று பாரிய திட்டங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி களுக்காக இவ்வாண்டு மூன்று பாரிய திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

800 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டங்களில் வீதிகளையும், பாடசாலைகளையும் புனரமைப் பது, போரினால் அழிவடைந்த பிரதேசங்களை மீள நிர்மாணிப் பதும் மின் விநியோகமும் இடம் பெயர்ந்து வாழும் 83 ஆயிரம் குடும்பங்களை மீளக் குடியமர்த் தல் என்பனவும் அடங்குகின்றன.

இதைவிட, வீடமைப்புக்கான வசதிகளை மேம்படுத்துவது வடக்கு-கிழக்கில் 800 பாடசா லைகளை மீளக் கட்டியெழுப்புவது என்பனவும் இவ் அபிவிருத்தித் திட்டங்களில் மேற்கொள்ளப்படும் எனவும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(உ-4)

### ஜனாதிபதி - பிரதமர் இடையிலான இழுபறி நிலை

# சர்வதேச உயர் மட்ட சமரசக் குழு தலையிட்டுத் தீர்க்கவேண்டும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் கூட்டாகச் செயற்படக் கூடிய சமரச இணக்கப்பாடு ஒன் றிக்கு வரவேண்டும்.

இதன் மூலம் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணலாம் என தேசிய சமா தான மன்றம் கோரிக்கை விடுத் துள்ளது.

இது குறித்து மேற்படி மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது,

சமாதான நட்வடிக்கையில் இருந்து பிரதமர் ரணில் விக்கிரம சிக்க விலகியிருப்பது தென்னிலங் கையில் நிலவி வரும் அரசியல் நெருடுக்கடி நிலையை மேலும் சிக்கலாக்கும்.

எனவே ஜனாதிபதியும், பிரத மரும் இணைந்து செயற்படும் வகையில் அவர்களுக்கு சில யோச னைகளை வழங்க சர்வதேச உயர் மட்ட சமரசக் குழு முன்வரவேண்டும்.

இதற்கான அழுத்தங்களையும் ஒத்துழைப்பையும் ஏனைய அரசி யல் கட்சிகள் வழங்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-60,10)

# சனிக்கிழமை தோறும் "இவ்வழியால் வாருங்கள்"

தனி தடுவென் பியாம்பன்ன (தனிச் சிறகால் பற), மே மகே சந்த (இது எனது நிலவு) போன்ற திரைப் படங்களையும் துன்கிந்த அத்தற (துன்கிந்த அருகில்) தியகட பகன (பனிக்கட்டி விளக்கு), சிந்தடிக் சிகின சிந்தடிக் கனவு போன்ற தொலைக்காட்சி நாடகங்களையும் இயக்கிய தென்னிலங்கையின் பிரசித்தி பெற்ற திரைப்பட, தொலைக்காட்சி நாடக இயக்குநர்களில் ஒருவரான அசோகா ஹந்தகம, நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் தொலைக்காட்சி நாடகப் பக்கமாக தனது பார்வையை செலுத்தியுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவரது காத்திரமான இப்படைப்புகள் சில சமயங்களில் மிகுந்த சர்ச்சைகளையும் உருவாக்கி விட்டுச் சென்று இருக்கின்றன. நீண்டகால கருத்தரிப்பின் பின்னர், இலங்கையின் சமூக, அரசியல் ஓட்டங்களை அலசிக்கொண்டு "இவ் வழியில் வாருங்கள்" எனும் தொலைக்காட்சி நாடகத்துடன் உங்களை சந்திக்கவிருக்கின்றார். இயக்குநர் அசோகா ஹந்தகம.

"இவ்வழியில் வாருங்கள்" தொலைக்காட்சி நாடகத்தொடர் இம்மாதம் 17ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகள் தோறும் ரூபவாஹினி "ஐ" அலைவரிசையில் இரவு 8.30 மணிக்கும், அதன் மீள் ஒளிபரப்பு இம் மாதம் 18ஆம் திகதி முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் பிற்பகல் 3.00 மணிக்கு தேசிய ரூபவாஹினியிலும் ஒளிபரப்பாக இருக்கின்றது.

"இவ்வழியில் வாருங்கள்" நாடகம் ஒரு காலத்தின் பதிவாகும். யாழ்.கண்டி வீதி திறக்கப்பட்டது. பாதையில் பல சம்பவங்கள்... மக்களின் பயணங்கள்... பயணத்தில் பல குடும்பங்களின் கதை, யுத்தம், சமாதானம், வாழ்க்கை, மரணம், காதல், வெறுப்பு என மக்களின் பல வாழ்வியல் பக்கங்களை வருடிச் செல்கிறது.

இலாப நோக்கங்களை அதிகமாகக்கொண்டு வெளிவருகின்ற தொலைக்காட்சி நாடகங்களின் மத்தியில் "இவ்வழியில் வாருங்கள்" முற்றிலும் மாறுபட்டு நுணுக்கமான கலை அனுபவங்களை அணுகுவதாக காணப்படுகின்றது.

இதனைத் தயாரித்து வழங்கியுள்ள யங் ஏசியா டெலிவிஷன், நீண்டகாலமாக சமாதானம், கல்வி, மனித உரிமை போன்ற விடயங்களில் விழிப்புணர்வை உருவாக்கும். விவரணப்படங்களையும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கிவருகின்றது. யங் ஏசியா டெலிவிஷன் முதல் முறையாக தயாரித்து வழங்கும் இந்தத் தொலைக்காட்சித் தொடர் நாடகத்தில் யங் ஏசியா டெலிவிஷனின் தேர்ச்சியுள்ள இளம் கலைஞர்கள் அதிக பங்களிப்பினை வழங்கி உள்ளனர்.

றஞ்சித் அமரசேகர, ராஜ கணேசன் ஏ.எம்.எம்.மன்சூர், எல்.தர்ஷன், பி.கலிஸ், தரிந்தி பொன்சேகா, ஆர்.ராஜேஸ்வரி, கமலா மோகன் குமார, நேரகிம் ஷஹீட், பி.ஜீவிதா போன்றோர் பிரதான பாத்திரங்களை ஏற்று இதில் நடிக்கின்றனர்.

கலை இயக்கம்: பற்றிக் டேவிட், படத்தொகுப்பு : எம்.யோகேந்திர, ஒளிபதிவு : சன்னதேசப்பிரிய, இசை : கபில பூகலராச்சி, திரைக்கதை - காட்சியமைப்பு - இயக்கம் அசோக்க ஹந்தகம.இலங்கையில் உள்ள அனைத்து மொழி மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் தமிழ், சிங்கள உபதலைப்புகளுடன்தொலைக்காட்சி நாடகம் தொகுக்கப்பட்டுள்ளது.

# அறிக்கைகளை ஆய்வு செய்ய தெரிவுக் குழு நியமிக்க அங்கீகாரம்

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவ முகாம் முற்றுகை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் பற்றி விரிவாக விசாரணை நடாத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்றவகையில், தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு நேற்று முன்தினம் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேற்படி இராணுவ முகாம் முற்றுகை விடயம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் இராணுவ விசாரணை ஆணைக்குழு ஆகியன சமர்ப்பித்த அறிக்கைகள் குறித்து விரிவான விசாரணைகளை நடாத்துவதற்கு ஏற்ற வகையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கு அங்கீகாரமளிக்க வேண்டுமெனக்கோரி அண்மையில் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் லொக்கு பண்டார அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இந்த நிலையில், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களான நிமால் சிறிபால டிசில்வா, தினேஷ் குணவர்த்தன,ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் லொக்கு பண்டார சமர்ப்பித்த மேற்படி அறிக்கைக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

அத்துடன்,மேற்படி பிரேரணையை வாக்களிப்புக்குவிடுமாறு பொதுஜன ஐக்கிய முன்னனியினர் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைய நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் தெரிவுக்குழுவை அமைப்பதற்கு ஆதரவாக 101வாக்குகளும், அதற்கு எதிராக 44 வாக்குகளும் பெறப்பட்டன.

இதையடுத்தே, மேற்படி விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவு நாள்

## நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட 9 அப்பாவித் தமிழ் மக்களின் 30வது நினைவு தினம் நேற்று படுகொலை செய்யப்பட்ட இடமான யாழ்.வீரசிங்கம் மண்டப முன்றலில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

சி.வி.கே.சிவஞானம் தலைமையில் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஈகச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைக்க, நினைவுத் தூபிக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், ஈ.பி.ஆர். எல் எவ் யாழ்மாவட்டச்செயலாளர் ரமேஸ் ஆகியோர் மாலையணிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன,

அங்கு உரையாற்றிய ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா,

உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூரும் இவ்வேளையில், அவர்களுடைய சாவுக்குக் காரணமானவர்களை இனங்கண்டு, நாம் அனைவரும் உரிய வகையில் செயற்படுவோமானால், இவ்வாறான துர்ச்சம்பவங்கள் இனி மேலும் இடம்பெறாமல் தடுக்க முடியும் என்றார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் உரையாற்றுகையில்,

நாம் எவ்வளவு விட்டுக் கொடுப்புக்களைச் செய்து வருகின்ற போதிலும், எமது பிரச்சினைக்கு உறுதியான தீர்வைத் தர அரசினால் முடியவில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களுக்கு விமோசனமில்லை.

பசப்பு வார்த்தைகளைக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வரும் அரசுகள் கடைசியில் இனவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு எம்மை அழிப்பதற்கே முயல்கின்றன எனக் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பெருமளவு பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-3,7)





தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் பலியானோரின் நினைவு தின நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் : தீபன், சாந்தன்)

# புலிகள் படைபலத்தைப் பெருக்குகின்றனர்

## பாகிஸ்தானில் ஜனாதிபதி பேட்டி

(இஸ்லாமபாத்)

சமாதானம் நிலவிய காலத்தில் மேலும் 11ஆயிரம் பேரை புலிகள் தம்முடன் புதிதாக இணைத்து தம் படைபலத்தை அதிகரித்துள்



ளார்கள். புலிகள் மூன்று தடவைகள் படை பலத்தை அதிகரித்துள்ளார்கள். முதலில் 7 ஆயிரத்தில் இருந்து 18ஆயிரம் வரை அதிகரித்துள்ளது. பெரும்பா லும் சிறுவர்கள் கட்டாயப் படுத்தி படையில் சேர்க்கப்படுகிறார்கள்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா, சார்க் மாநாட்டை முடிந்துக் கொண்டு நாடு திரும்ப முன் இஸ்லாமபாத்தில் செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

புலிகளின் படை பலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதைத் தடுக்க உதவ முடியாத நிலையில் நோர்வேத் தரப்பினர் வெளியேறிவிட்டனர். புலிகள் தாம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி பல புதிய முகாம்களை அமைத்துள்ளனர். சமாதான செயற்பாடுகள் ஆரம்பித்தது முதல் கிட்டத்தட்ட 100 பேரை கொலை செய்துள்ளார்கள். பெரும்பாலானோர் இராணுவத்தினர். இருந்தும் புலிகள் சமானத்திற்குள் வர சில வாய்ப்புகளும் உண்டு.

எனக்கும் பிரதமருக்கும் இடையான பேச்சுக்கள் முறிந்து விடவில்லை. புதிய சுற்றுப்பேச்சுக்கள் இம் மாத பிற்பகுதியில் ஆரம்பமாகும். பேச்சுக்கள் தொடர்ந்து வருகின்றன. புதுவருட விடுமுறைக்குப் பின் பேச்சுக்கள் ஆரம்பமாகும். இருவரும் ஒரு முடிவுக்கு வருவோம் என்பதில் நம்பிக்கை இருக்கிறது. நான் பாதுகாப்பமைச்சைப் பொறுப்பேற்றதிலிருந்து பிரச்சினைகள் எழுந்துள்ளன. சமாதான செயற்பாட்டை மேற்கொள்ளப் பிரதமர் விரும்பவில்லை. பாதுகாப்பு அமைச்சை மீளப்பெறவே விரும்புகிறார். இது சாத்தியமற்றது.

பாராளுமன்றம் பெரும்பான்மையுடன் பிரதமர் ஆட்சி அமைத்தவுடனேயே பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்காமல் விட்டது எனது தவறு. அரசியல் யாப்பின்படி நான் எதுவும் செய்யமுடியும். அவ்வாறு செய்ய விரும்பாமல் ஏனைய அமைச்சுக்களைப் போலவே இரண்டு வருடங்களுக்கு முன் பாதுகாப்பு அமைச்சை வழங்கியிருந்தேன். ஆனால் இதனைத் தவறாக பயன்படுத்தியதால் மீளப் பெற்றுக் கொண்டேன்.

பிரதமருக்கும் எனக்குமிடையில் பிரச்சினைகள் எழுந்தவுடனேயே பல சமரசத்தீர்வுகளை நான் முன்வைத்தேன். ஒன்றிணைந்து செயற்பட விரும்பினேன். ஆனால் அவை பெரும்பாலும் பிரதமரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இப்பிரச்சினை சுதந்திரக் கட்சிக்குள் எதிப்பை உருவாக்கி விட்டது. மற்றைய பெரும்பான்மை கட்சியுடன் இணைந்து செயற்பட சுதந்திரக்கட்சி விரும்புகிறது. ஒரு பெரிய கட்சி மற்றைய கட்சியுடன் இணைந்து செயற்படுவதை வலியுறுத்துவது இதுவே முதற்தடவை. ஆனால் மற்றைய கட்சி இதற்குத் தயார் இல்லை அவர்கள் சம்மதித்தால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் எனக் கூறியுள்ளார் (உ-6)

### யாழ்.நீதிமன்றினால் கடந்த ஆண்டு

# சுமார் 66 இலட்சம் ரூபா தண்டப் பணமாக அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் கடந்த 2003 ஆம் ஆண்டில் 65 இலட்சத்து 89ஆயிரத்து 147 ரூபா 11சதம் தண்டப் பணமாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணம், பிணை வைப்புகள், நானாவித வைப்புகள், பிரதிபண்ணல் கட்டணம் தொடர்பாக இத்தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆண்டில் தண்டப் பணங்களை பிரதேச சபைகளுக்கு மீளளிப்பதற்காகவும், பிணைவைப்புக்கள், நானாவித வைப்புக்கள், பிரதிபண்ணல் கட்டணங்கள் என்பவற்றை மீளளிப்பதற்காகவும் 53 இலட்சத்து 18 ஆயிரத்து 249 ரூபா 11சதம் நிதியமைச்சு செயலாளரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தவிர, யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை, வலி.கிழக்கு பிரதேச சபை, வலி.தெற்கு பிரதேச சபை, வலி.தென்மேற்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கு குறித்த ஆண்டில் 27 இலட்சத்து 89 ஆயிரத்து 719 ரூபா 37சதம் மீளளிக்கப்பட்ட தண்டப்பணத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், பிணை வைப்புக்கள், நானாவித வைப்புக்கள், பிரதிபண்ணல் கட்டணங்கள் தொடர்பாக வைப்பாளர்களுக்கு 25 இலட்சத்து 53 ஆயிரத்து 479 ரூபா 74சதம் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அறவிடப்படும் தண்டப்பணத் தொகை வருடா வருடம் அதிகரித்து வருவதாகவும் மேற்படி நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-3)

# கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சைக்கிளில் வந்த சிறுவனை மோதியது

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து கட்டுப்பாட்டை இழந்ததில், கடையில் பொருட்களை வாங்கிக்கொண்டு வந்த சிறுவனை மோதியது.

நேற்றைய தினம் காலை 7.30 மணியளவில் ஓட்டுமடம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த அன்ரனி றொசான் (வயது 12) என்ற சிறுவனே பஸ் மோதியதில் காயமடைந்துள்ளார்.

சிறுவன் பயணம் செய்த துவிச்சக்கரவண்டி பேருந்தின் சில்லுக்குள் சிக்கி பலத்த சேதத்துக்கு உள்ளானது.

மேற்படி சம்பவத்தில் பேருந்தில் பயணித்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி மாத்திரமே உடைந்து சம்பவ இடத்தில் சிதறிக்காணப் பட்டது. (உ-3,7)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

11

## அறிமுகம்

யாழ்ப்பாணத்திற்கூடவிருந்த தமிழ்த் தலைமைக்காரரின் முதலாவது பிராந்திய சபை, தேசாதிபதி விடுமுறையிற் போகவிருந்த காரணத்தினாலே அங்கு கூடுவதற்குப் பதிலாக 1909 யூன் மாதம் முதலாம் நாள் கொழும்பிலே கூடியது. அதிற் பங்குபற்றிய தலைமைக்காரரின் விபரங்கள் மேல்வருவனவாகும்.

வடமாகாணம்: யாழ்ப்பாணம் பிரிவின் ஓய்வுபெற்ற மணியகாரன் இராசவாசல் முதலியார் எம். தம்பாபிள்ளை; யாழ்ப்பாணம் பிரிவின் மணியகாரன் எஸ். சின்னையா; தென்மராட்சி மணியகாரன் எம். முத்துக்குமாரசாமி; முல்லைத்தீவு மாவட்டத்து முதலியார் கே. யூ. தம்பையா; மன்னார் மாவட்டத்து முசலிபற்று அதிகாரி வி. பிராஸ்பிள்ளை.

கிழக்கு மாகாணம்: பாணமைபற்று வன்னிபம் ஜீ. எச். கனகசபை; மட்டக்களப்பு நகரம், மண்முனை வடக்கு வன்னிபம் எஸ். டபிள்யூ. ஏ. கனகசபை; ஏறாவூர், கோறளைப் பற்று வன்னிபம் ஏ.கே. காரியப்பர்; கொட்டியாரம்பற்று வன்னிபம் ரீ. துரையப்பா.

இந்தக்கூட்டத்திலே (1) தமிழ்த் தலைமைக்காரருக்கு வழங்கப்படக்கூடிய உயர்விருதுப் பெயர்கள், (2) நீர்ப்பாசன வசதிகள், குடியேற்றத் திட்டங்கள், (3) விவசாய வங்கிகள், (4) கட்டாக்காலி மாடுகள், (5) வனவிலங்குப் பாதுகாப்பு, (6) தேசவழமை என்பன தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

தமிழ்த் தலைமைக்காரரைப் பொறுத்த வரையில், அவர்களில் மிகப் பிரசித்தமான ஒருவருக்கு எத்தகைய கௌரவப் பட்டத்தை வழங்குவது பொருத்தமாகுமென்று கூட்டத்தில விரிவாக ஆராய்ந்தனர். கண்டிச் சிங்களவரிடையிலும், கரையோரப் பகுதிகளில் வாழும் சிங்களவரிடையிலும் , முற்காலங்களில் வழங்கிய பதவிப் பெயர்களான **அதிகாரி, முதலியார், மகாமுதலியார்** முதலியவற்றைக் கௌரவப் பட்டங்களாக வழங்குவதற்குஅரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் தேசாதிபதி அறிவித்தார்.

எனவே, தமிழர்களைப் பொறுத்தவரையில் அதிகாரி என்ற பட்டப் பெயரை வழங்குவது பற்றி ஆலோசித்தனர். உரும்பிராய் வாசியான இலங்கையர், மட்டுவில் வாசியான இலங்கை நாராயணர், நவாலியைச் சேர்ந்த வெற்றிவேலு என்போர் அதிகாரிப் பட்டத்தை முற்காலத்திலே பெற்றிருந்தனர் என்று இராசவாசல் முதலியார் தம்பாபிள்ளை சொன்ன குறிப்பினையும் சபையினர் கவனித்தனர். மேலும், முற்காலத்திலே இராச்சியத்தின் நான்கு திசைகளிலுமுள்ள பகுதிகளிலுஞ் சிறப்புமிக்க படைவீரர்களை அதிகாரிகளாக அரசன் நியமித்தான் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் அடங்கிய பகுதிகளில் அதிகாரி என்ற பதவிப் பெயர் வழக்கிலிருக்காத காரணத்தினால் அம்மாகாணத்தைச் சேர்ந்த தலைமைக்காரரினால் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், தமிழரிடையிலே முற்காலங்களில் வழங்கிய பதவிப் பெயர்களில் அதிகாரியென்பதே மிக உயர்வானது என்பதால் அதனைத் தமிழ்த் தலைமைக்காரருக்கு வழங்குவதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**விவசாய அபிவிருத்திகளும் குடியேற்றங்களும்:-** நீர்ப்பாசனத்திற்குப் பயன்படக்கூடிய பாழடைந்த குளங்களைத் திருத்தி, விவசாய அபிவிருத்திகளை ஏற்படுத்துவதில் அரசாங்கம் நாட்டம் கொண்டிருந்தது. ஆயினும், பிற்காலங்களிற்போல அரசாங்கத்தின் பொறுப்பாகவும், அதன் செலவிலும் குடியேற்றத்திட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் ஈடுபடவில்லை. தமிழர் வாழ்ந்த பிரதேசங்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் ஏனையவற்றுக்குமிடையிலே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்
கவிதைப் போட்டி -2004
1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
"தமிழா உனக்கேன் இக்கதி"

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.
இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த

றுக்குமிடையிலே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே குடியானவர்கள் செய்கை பண்ணுவதற்குப் போதியளவு நிலங்கள் இல்லை. மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிகமான அளவில் நிலங்கள் செய்கை பண்ணப்படாது இருந்தன. யாழ்ப்பாணத்திற் சனத்தொகை மிகுந்து காணப்பட்டது. ஏனைய பகுதிகளில் சனத்தொகை மிகக்குறைவாயிருந்தது.

சுகாதார வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை, காட்டு நுளம்புகளினால் ஏற்படும் நோய்கள், வறுமை ஆகியவற்றினாலும் சமுதாயம் நலிவுற்ற நிலையிலே காணப்பட்டது. கட்டுக்கரைக் குளம், இரணைமடு, அக்கராயன் குளம் முதலிய நீர்த்தேக்கங்கள் பாழடைந்த நிலையில் இருந்தன. அவற்றின் சுற்றாடல்களிற் காடுகள் படர்ந்திருந்தன.

அரசாங்கம் குறைந்த விலையில் நிலங்களை ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலமும், குறைந்தளவில் நாலிலொரு பங்கு உற்பத்தியை மட்டும் இறை கடனாகக் கொள்வதன் மூலமும் காணிகளை அபிவிருத்தி செய்வோருக்கு ஊக்கமளிக்க முடியுமென்று தேசாதிபதி கூட்டத்தில் விளக்கினார். நிலங்களைக் கொள்வனவு செய்வதற்குச் சிங்களவர் உட்படப் பலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறினார். நிலப்பங்கீட்டினைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தவருக்கு முன்னுரிமை வழங்குவதும், மிகுதியான நிலங்களைச் செய்கை பண்ணுவதற்கு சன நெருக்கம் மிகுந்த தென்னிந்தியக் கிராமங்களில் உள்ளவர்களை வரவழைப்பது பிரித்தானிய அரசாங்கத்தின் கொள்கையென்றும் தேசாதிபதி விளக்கினார்.

(தொடரும்)

## அருஞ்சொல் விளக்கம் (தொடர்ச்சி)

**மாதாக்கள் (ம)** - தாய்வழி முன்னோர்கள் அனைவரும் மாதாக்கள் எனப்படுவர். தந்தைவழி முன்னோர் அனைவரும் அதேபோலத்தான் தாதாக்கள் எனப்படுவர். அவர்கள் இரு சாராரையும் மூதாக்கள் என்பர். மூதாக்கள் எல்லோரையும் மாதாக்கள் என்று சொல்வதும் முற்காலத்து முக்குவர் வழமை.

**முதலியார்** - தலைமைக்காரரின் பதவிப் பெயர். தமிழ்ப் பிராந்தியங்கள் அனைத்திலும் வழங்கியது. முதலி என்பதன் மூலமாக வந்தது. அரசனதும், வன்னியரதும் ஆலோசகராயும் நிர்வாகப் பொறுப்புகளை நிறைவேற்றுவோராயும் முதலியார்கள் கடமை புரிந்தனர். நீதி பரிபாலனம், இறைவரி நிர்வாகம், பொது நிர்வாகம் ஆகிய துறைகள் சார்ந்த கடமைகளைப் புரிந்தனர். *(தொடரும்)*

## இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

அலுவலகப்பாவனைக்கு

| | |
|---|---|
| | |

முழுப்பெயர்.......................

.......................

தபால் முகவரி.......................

.......................

பிறந்த திகதி.......................

தே.அ.அ. இல .......................

மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

......... ..........................

திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

............... ..........................

திகதி போட்டியாளர்கையொப்பம்

பொதுசன நூலகம்

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு -குறள்

# வலம்புரி

## அமைச்சர் பீரிஸின் ஆபத்தான அறிவிப்பு

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் அதிகாரம் இல்லையென, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு-உள்துறை-ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்ததன் காரணமாக பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பிரதமர் இழந்துவிட்டார்.

பாதுகாப்புப் படையினரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பிரதமர் இழந்துவிட்டதன் காரணமாகச் சமாதானப் பேச்சுக்களைத் தொடரும் அதிகாரம் பிரதமரிடம் இல்லையென்பதே அமைச்சர் பீரிஸின் அறிவிப்பிற்கான ஆதாரமாகும்.

அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு நியாயமானதென ஏற்றுக் கொண்டால், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் செய்து கொண்ட யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளதா? அது செல்லுபடியாகுமா? என்ற கேள்விகள் பொது மக்களிடையே ஏற்படவே செய்யும்.

அதாவது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருவரில் ஒருவர் விடுதலைப் புலிகளின் தலைவர். மற்றையவர் அரசின் தலைவர். இங்கு முப்படைத் தளகர்த்தர் என்ற பதவியை கொண்டிருக்கும் ஜனாதிபதி கையொப்பமிடவில்லை.

எனினும் பாதுகாப்பு அமைச்சு பிரதமரின் அதிகாரத்திற்குள் இருந்தமையால் ஜனாதிபதியின் கையொப்பம் அப்போதைய சூழ்நிலையில் தேவையற்றதாக இருந்திருக்கலாம்.

ஆனால், தற்போதைய கள நிலைமை மாறியுள்ளது. இப்போது பாதுகாப்பு அமைச்சும் ஜனாதிபதியிடமேயுள்ளது.

ஆக, புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காப்பாற்றும் அதிகாரத்தைப் பிரதமர் ரணில் தற்போது இழந்துவிட்டார். அப்படியாயின், இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு யாரிடம் உள்ளது!

ஜனாதிபதியைப் பொறுத்தவரை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர் கையொப்பமிடாததன் காரணமாக அவ்வொப்பந்தத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை, தன்னைச் சாராது எனக் கூறி அவர் தப்பித்துக் கொள்ள முடியும்.

எனவே, இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிரதமர் ரணில் பலமிழந்து போனதன் காரணமாக ஒப்பந்தமும் செல்லுபடியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இதனையே அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு நாசுக்காகத் தெரிவிதத்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ஏ-9 வீதிப் பயணம் முதற்கொண்டு அனைத்து யுத்த நிறுத்த நடவடிக்கைகளும் அமுலாகிக்

# தெல்லி. புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை மீள ஆரம்பிக்க பல்தரப்பு முயற்சி

(திருநெல்வேலி)

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும் வகையில் பல்வேறு தரப்புக்களும் உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்த வகையில், இச் சிகிச்சைக்குரிய கதிரியக்க இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன 1 கோடி ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளார்.

அத்துடன், அதன் வெளிநோயாளர் பிரிவுகள் மற்றும் நோயாளர் விடுதிகள் ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கென உலகவங்கி 11 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதுடன், இதற்கான கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்கு கட்டடத்திணைக்களம் முன்வந்துள்ளது.

கதிரியக்க இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதோடு இவ் வைத்தியசாலைக்கு புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் மற்றும் கதிரியக்க இயந்திரத் தொழிலநுட்பவியலாளர்கள் ஆகியோரை நியமிப்பதற்குரிய நடவடிககைகளை மேற்கொள்ளவதற்கும் உலக சுகாதார ஸ்தாபனம் முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-43)

ஒன்பது பேரைப் பலிகொண்ட

## பத்தேகம விசச் சாராய விவகாரம் விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

காலி பத்தேகமவில் அண்மையில் விசச் சாராயம் அருந்தி பலர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக உடன் விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானத்தை அருந்தியதாக கூறப்படும் 200 பேரில் இதுவரை 9 பேர் உயிரிழந்ததுடன் ஏனையயோர் கண்பார்வை இழந்தும் பல்வேறு வகையில் பாதிப்புக்குள்ளாகியும் இருக்கின்றதாக காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமிந்த தேரர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

(உ-60,10)

வவுனியாவில் அண்மைக்கால

## கொள்ளைச் சம்பவங்களை தடுக்கும் பணியில் புலிகள்

(வவுனியா)

வவுனியாவில் அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை அமைத்து இத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக விளக்கங்கள் அளிக்கப்பட்டு விழிப்புக் குழுக்களைத் தெரிவு செய்துவருவதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

(உ-64,8)

## இடமாற்ற நடைமுறைகள் பாதக விளைவுகள் ஏற்படுத்தும்

### செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் அரசாங்க ஊழியர்களை இடமாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறை மாற்றங்கள் பாதகவிளைவுகளையே தோற்றுவிக்குமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

## சமாதான முன்னெடுப்புக்களில் சுவீடன் பா. உ. க்கள் ஆர்வம்

### நாளை தமிழ்ச்செல்வனை சந்திக்கின்றனர்

(கொழும்பு)

சுவீடன் பாராளுமன்ற உறுப்பினர் குழு நாளை திங்கட்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளது.

சில நாட்கள் முன் இலங்கை வந்துள்ள இக்குழு, சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளமை, அரசாங்கத்திற்கும்-ஜனாதிபதிக்கும் இடையிலான அரசியல் சாசன சர்ச்சை விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு ஆகியன குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள், அரசாங்கம் மற்றும் எதிர்கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, இம்மாதம் 23 அம்திகதி கொழும்பில் நடைபெறவுள்ள, டோக்கியோ மாநாட்டுப் பிரகடனத்தின் இரண்டாவது மீளாய்வுக் கூட்டத்தில் பங்கு கொள்வதற்காக எதிர்வரும் 19 ஆம் திகதி ஜப்பானின் விசேடதூதுவர் யசூசி அகாஷி இலங்கை வரவுள்ளார்.

மேற்படி கூட்டத்தில் பங்கு கொள்வதற்கு முன்னர் இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை குறித்துப் பேசவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-61,10)

## வெளிநாட்டில் தொழில் புரிவோர்க்கு ஓய்வூதியம்

வழங்க தொழில் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமர சிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ராஜபக்ஷ வெளிநாடு சென்று தொழில் புரிவோருக்கான ஒய்வூதியத் திட்டம் ஒன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என முன்வைத்த கருத்துக்கு விளக்கமளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் பணிபுரிவோருக்கான வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுசரணையுடன் நீண்டகால அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படவுள்ள இத்திட்டம் குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்,

கன் காரணமாக ஒப்பந்தமும் செல்லுபடியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இதனையே அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு நாசுக்காகத் தெரி விததுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ஏ-9 வீதிப் பயணம் முதற்கொண்டு அனைத்து யுத்த நிறுத்த நடவடிக்கைகளும் அமுலாகிக் கொண்டிருக்கிறது. இங்கு ஒப்பந்தம் செல்லுபடி யற்றுப்போய்விடுமாயின் மீண்டுமோர் யுத்தம் வெடிக் கும்பேராபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

அதேவேளை, ஒப்பந்தம் நீக்கப்படுவதாக இருந் தால், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைக ளைக் கடைப்பிடிப்பதற்குக் கூட அவகாசம் இல் லாமல் போகும். ஏனெனில் ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாக இருக்கக் கூடிய பிரதமர் அதிகாரம் இழந்து விட்டார்.

அதிகாரம் இழந்த ஒருவர் ஒப்பந்தத்தை முடிவுக் குக் கொண்டுவருவதற்கான விதிமுறைகளைக் கூட அமுல்படுத்தும் தகுதியைக் கொண்டிருக்க மாட்டார் என்பது ஏற்புடையதே.

ஆகையால் தற்போது நடைமுறையிலுள்ள புரிந் துணர்வு ஒப்பந்தத்தை மீண்டும் வலுப்படுத்துவ தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இல்லையேல் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடை முறையில் உண்டென்ற நம்பிக்கையோடு காலம் கடத்துவது பேராபத்தாக அமைந்துவிடும்.

சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்ட நோர்வே அரசும் தனது முயற்சிகளை இடை நிறுத்திவிட்டு வெளியேறியிருக்கின்ற நிலையில்,

புரிந்துணர்வு ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி விடுமாயின், அதனால் ஏற்படக் கூடிய பெரும் பாதிப்புக்களைத் தமிழ் மக்களே அனுபவிக்க வேண்டி வரும் என்பதால், அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் அறிவிப்பை ஓர் அபாய அறிவிப் பாகக் கருதிக்கொண்டு உரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் அரசாங்க ஊழியர்களை இடமாற்றுவதற்காக மேற்கொள்ளப் பட்ட நடைமுறை மாற்றங்கள் பாதகவிளைவுகளையே தோற்றுவிக்குமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் களுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில்,குறிப்பாக வன்னி மாவட் டத்தில் உள்ள உளளூராட்சி சபையிகளில் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களே பணியாற்றி வந்தனர்.

அவர்களை தற்போது இடமாற்றஞ் செய்து புதியவர் களை நியமித்துள்ளதால் கடமைகளை சரிவர மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியிருக்கின்றது.

வன்னிமாவட்டம் ஏனைய மாவட்டங்களைப் போல் அல் லாது, பரந்த பிரதேசமாகவும்,கஷ்டப் பிரதேசமாகவும் காணப்படுவதால் புதிதாக நியமனம் பெற்றவர்கள் தமது பணிகளை சரிவர செய்ய முடியாது பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்றுள்ளது. (உ-60,10)

# தினசரி தியானம்

## பரந்த நோக்கம் கொள்

வாழ்நாள் முழுவதையும் பிறருக்குத் தொண்டு புரிவதற்காகவே அர்ப்பணம் செய். அப்படித் தொண்டு புரிவதில் ஆசை. உற்சாகம் காட்டு. ஒவ்வொரு நொடிப்பொழுதும் அப்பர மனை நினைத்துக் கொள்.

உன்னுடைய குணங்களைச் சீர்படுத்து. சரியாக நடந்துகொள். குறுகிய அகங்காரம் கொண்ட உன் சமூகத்திலிருந்து வெளியே வா. பரந்த நோக்கம் கொள். நீ பரமனை எய்துவாய்.

**சுவாமி சிவானந்தர்**

வித்துள்ளார்.

வெளிநாட்டில் பணிபுரிவோருக்கான வேலைவாய்ப்பு பணி யகத்தின் அனுசரணையுடன் நீண்டகால அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படவுள்ள இத்திட்டம் குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்,

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் ஐரோப்பிய நாடுகளில் 20 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிவருகின்றனர்.

இதனால் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ராஜபக்ஷ வால் முன்வைக்கப்பட்ட இவ் யோசனை வரவேற்கத்தக்க ஓர் விடயம் என்றார். (உ-4)

# சுகாதார சேவை அமுல் குறித்து

# ம. உ. ஆ. குழு விசாரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் சுகாதாரசேவைகளை அமுலாக்குவது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

மக்களின் அடிப்பை உரிமைகளில் ஒன்றான சுகாதார சேவைகள் சரிவர மேற்கொள்ளப்படுவதில்லையென தம க்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, பெரும்பாலும் வைத்திய சாலைகளிலேயே இத்தகைய சுகாதார சீர்கேடுகள் நிலவி வருகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நடத்த விரைவில் விசேட குழுக்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித் துள்ளது. (உ-60,10)

# நாய்களுக்குத் தடுப்பு மருந்து

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்குப்பகுதியில் உள்ள வளர்ப்புநாய் களுக்கான தடுப்பு மருந்தேற்றல் இம் மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

சனசமூகநிலையம், 'கிராம அலுவலர்பிரிவு ஆகியன ஊடாக இத்தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கை இடம்பெற வுள்ளது. (உ-7)

## ஸ்ரீ.மு.காங்கிரஸ் முன்வைக்கும்யோசனையில்

# வடபகுதியில் வாழும் முஸ்லிம்களின் அபிலாசைகள் உள்ளடக்கப்படும்!

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முன்வைக்கப்படவுள்ள மாற்று யோசனைகளில் வடபகுதி முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய வகையிலான அம்சங்கள் உள்ளடக்கப்படுமென ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வடபகுதியைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள், சமயப் பிரமுகர்கள்,புத்திஜீவிகளுடன் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது வடபகுதியை பிரதிநிதித்துப்படுத்தும் சுமார் 40 மேற்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இப்பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா. முஸ்லிம் காங்கிரஸினால், அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ள மாற்று யோசனைகளில் வடபகுதி முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகள் பிரதிபலிக்கப்பட வேண்டுமென்று அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை அடுத்து, மாற்று யோசனைக்கு இறுதி வடிவம் கொடுக்கும் போது வடபகுதி முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் அதில் சேர்க்கப்படுமென்று அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.(ம)


## பதவி வெற்றிடம்

### பிரதம ஆசிரியர்

**பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது.**

**சுயவிபரங்கள் அடங்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும்**

**நிர்வாக உத்தியோகத்தர்**
**வலம்புரி - சங்குநாதம்**
**இல.15, வெள்ளாந்தெரு**
**யாழ்ப்பாணம்**

**எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 23.01.2004ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்**

**நிர்வாக உத்தியோகத்தர்,**
**வலம்புரி- சங்குநாதம்**

## பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

★கணனி பக்க அமைப்பாளர்கள்-இருபாலாரும் (பகல், இரவுக் கடமை)
★அலுவலகச் செய்தியாளர்கள்-இருபாலாரும் (பகல், இரவுக் கடமை)
★ஒப்புநோக்குநர்கள்-இருபாலாரும் (பகல்,இரவுக் கடமை)
★கணக்குப் பதியுநர்கள்-பெண்கள் மட்டும்(க.பொ.த.உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தி)
★இயந்திர இயக்குநர்கள்-பயிலுநர்(ஆண்கள் மட்டும்)
★பாதுகாப்பு ஊழியர்கள்(ஆண்கள் மட்டும்)

**கல்வித்தகைமைகள்**

இயந்திர இயக்குநர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

**குறிப்பு:-** விண்ணப்பதாரர்கள் யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவர்களாக இருப்பது அவசியம்.

விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவிகளைக் குறிப்பிட்டு முழுப்பெயர், நிரந்தர, தற்காலிக முகவரி, பிறந்த


## விபத்தில் படுகாயம்

(கிளிநொச்சி)

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தருமபுரம் மருத்துவனைக்கு முன்பாக வானும் மோட்டார் சைக்களும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் சென்றவரான முத்தையன் கட்டைச் சேர்ந்த ந.புஸ்பராசா (வயது22) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

இவர் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, முருகண்டிப் பகுதியில் சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது சைக்கிளில் சென்ற யோகராசா சரோஜா(வயது23) என்ற பெண்ணே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ச)

## ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருவார்

(கொழும்பு)

ஜேர்மனின் வெளிவிவகார அமைச்சர் எச்.ஈ.பிறஸ்ரின் மூல எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

13ஆம் திகதி இலங்கைவரவிருக்கும் அமைச்சர் எச்.ஈ.பிறஸ்ரின் மூல இங்கு மூன்று தினங்கள் தங்கிருப்பார்.

## வற் வரி மூலம் மக்களை வதைக்கும் அரசைத் தூக்கி எறிவோம்

### மகிந்த ராஜபக்ஷ அறைகூவல்

(கொழும்பு)

பெறுமதி சேர்க்கப்பட்ட வற்வரி மூலம் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனக்கூறிக் கொண்டு வறிய மக்களின் வாழ்க்கையை மேலும் இருளடையச் செய்யும் வகையில் அத்தியாவசியப் பொருட்களின் வறிவரியை அரசாங்கம் அதிகரித்துள்ளது. என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியமான பொருட்களின் வற்வரியை 10 சத வீத்தில் இருநது 12 சத வீதமாக அதிகரித்துள்ள அதேவேளை, ஆடம்பரப் பொருட்கள் மீதான பெறுமதிசேர் வரி 20 சத வீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைத்துள்ளது.

இவை தவிர, வாகனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பினால் பொது மக்களின் போக்குவரத்துச் சேவையும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, பொதுமக்களுக்கு வற்வரிமூலம் பெரும் தொல்லைகளைக் கொடுத்துவரும் அரசாங்கத்தை பதவியிலிருந்து விலகவைத்து மக்களுக்கு அனுகூலமான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு சகல கட்சிகளும் முன்வரவேண்டும்.

அதற்கு சகல மக்களும் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கவேண்டுமென்று மேலும் மகிந்த கேட்டுள்ளார்.(உ-60,10)

## பிரதமர் ரணிலின்...

முன்பு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்ட போது நாட்டின் தலைவி என்ற முறையில் சந்திரிகா குமாரதுங்காவுடன் கலந்தாலோசிக்காது ஒப்பந்தம் செய்ததன் விளைவே இப்போதைய அரசியல் இழுபறி நிலைக்குக் காரணம் என்றும், இந்த விடயத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க வந்த நோர்வே அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஜனாதிபதியின் ஒப்பத்தைப் பெறாமல் விட்டமையே தற்போதைய சமாதான சூழ்நிலையை கேள்விக்கிடமாக்கியிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்துக் கொள்ளாது இரண்டு பெரிய அரசியல் கட்சிகளுமான பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் மற்றும் சிறிய அரசியல் கட்சிகளும் இணைந்து தேசிய அரசு அமைக்க ரணில் விக்கிரமசிங்கா பின்னிற்பது ஏன்னென தென்னிலங்கை புத்திஜீவிகள் கேள்வி எழுப்பியிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருப்பதுடன்,

தேக்க நிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் யாருடன் ஆரம்பிப்பது என்ற நிலையைத் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் தீர்மானிக்க வேண்டிய முக்கிய விடயமாக இருப்பதாகவும், அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ரணில் விக்கிரமசிங்காவை பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யக் கோரியிருப்பதும்.

அதிகாரம் உள்ளவர்களுடன்தான் இனிமேல் பேசுவோம் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், ஜனாதிபதியுடன் பேசமாட்டோம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் தான் பேசுவோம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் அறிவிப்பும், சமாதான முயற்சிகளை நீண்ட தூரத்திற்குப் பின் தள்ளியிருப்பதாகவும் இதனால் என்ன நிகழுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## எனது சகோதரனை...

கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இதன் பின்னர் கொலையாளி ஆயுதத்துடன் கைது செய்யப்பட்டார். இவரின் விரல் அடையாளங்களும் பெறப்பட்டது என்றார்.

இச்சம்பவத்தை நேரில் கண்ட இன்னொருவர் கொலையாளி காயமடைந்த ஒருவரை தாங்கியபடி தனது சகோதரனைக் கொன்றவனைப் பழிவாங்கிவிட்டேன். வேறுயாரையும் கொல்லமாட்டேன். ஆனால் தனக்குக் கிட்ட யாராவது வந்தால் சுடப்போவதாகப் பயமுறுத்தினார் என்றார்.

யல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.கொலையுண்டவரின் சடலத்தைப் பிரேதஅறையில் பரிசோதனை செய்தனர் இறந்த தம்மிக்கவின் சடலம் அவரின் தாயாராலும், மனைவியாலும் அடையாளம் காணப்பட்டது. மஜிஸ்ரேட் விசாரணைகள் எதிர்வரும் திங்கள் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இக் கொலை தொடர்பாக 5 சந்தேக நபர்களின் தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குற்றத் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ்

**வயதெல்லை**

20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

**குறிப்பு:-** விண்ணப்பதாரர்கள் யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவர்களாக இருப்பது அவசியம்.

விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவிகளைக் குறிப்பிட்டு முழுப்பெயர், நிரந்தர, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, பால், விவாக நிலை, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை, பிற தகைமை என்பவற்றை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களுடன், 13.01.2004 அன்று பி.ப 3.00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

***இரவுக் கடமைக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.**

**வலம்புரி- சங்குநாதம்**
**15,வெள்ளாந்தெரு**
**வண்ணார்பண்ணை**
**யாழ்ப்பாணம்**

**நிர்வாக உத்தியோகத்தர்**


**மிக விரைவில்**

**உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்**

**விவாத அரங்கு**

**கருத்துச் சங்கமம்**

**மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்**

***ஆசிரியர்களா?**

***மாணவர்களா?**

***பெற்றோர்களா?**

**உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன**


(கொழும்பு)

ஜேர்மனின் வெளிவிவகார அமைச்சர் எச்.ஈ.பிறஸ்ரின் மூல எதிர் வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

13ஆம் திகதி இலங்கைவரவிருக்கும் அமைச்சர் எச்.ஈ.பிறஸ்ரின் மூல இங்கு மூன்று தினங்கள் தங்கிருப்பார்.

வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்ணான்டோவின் அழைப்பையேற்று இலங்கை வரவுள்ள இவர் ஜேர்மன் இலங்கைத் தூதுரகத் தொடர்பில் 50வது வருட நிகழ்வில் கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆசிரியர்களின் பெயர்களை நீக்கிவிடுக

(கொழும்பு)

மாகாண சபைகளில் ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட 526 தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் பெயர்களை பாடசாலை சம்பளப் பட்டியலில் இருந்து நீக்குமாறு கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட மாகாண சபைகளைப் பணித்துள்ளது. (உ-60,10)

## முஸ்லிம்..

நபர்களே இளைஞரைக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரஸ்தாப இளைஞர் காணாமல் போனதையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த)

இச்சம்பவத்தை நேரில் கண்ட இன்னொருவர் கொலையாளி காயமடைந்த ஒருவரை தாங்கியபடி தனது சகோதரனைக் கொன்றவனைப் பழிவாங்கிவிட்டேன். வேறுயாரையும் கொல்லமாட்டேன். ஆனால் தனக்குக் கிட்ட யாராவது வந்தால் சுடப்போவதாகப் பயமுறுத்தினார் என்றார்.

இக் கொலை பற்றிய மேலதிக விசாரணைகள் கொழும்பு குற்றவியாலும் அடையாளம் காணப்பட்டது. மஜிஸ்ரேட் விசாரணை எதிர்வரும் திங்கள் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இக் கொலை தொடர்பாக 5 சந்தேக நபர்களின் தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குற்றத் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சரத் லுகொட தெரிவித்துள்ளார்.(த-6)

## உடன்பாட்டிலிரு...

ளுக்கு முன்பாக எழுத்து மூலமாக நோர்வே அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டியது அவசியம் எனவும் தூதுவர் தோமஸ் ஸ்ரங்லண்ட் தெரிவித்துள்ளார்.

இத்தகைய உத்தியோகபூர்வ அறிவித்தலெதுவும் கிடைக்கப் பெறாத நிலையில், அதுகுறித்து தம்மால் கருத்தெதுவும் வெளியிட முடியாது என்றும் தோமஸ் ஸ்ரங்லண்ட் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, அரச தரப்பிலிருந்து உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில், இதுகுறித்து கருத்தெதுவும் தெரிவிக்க முடியாது என விடுதலைப் புலிகளின் வட்டாரங்களும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## தனியார்...

போராட்டத்தில் குடாநாட்டுத் தனியார் பஸ் உரிமையாளர்களும் ஈடுபடவுள்ளதாக யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் அறிவித்துள்ளார்.வற் வரியினால் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலை அதிகரித்துள்ளது.இதனால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு இடர்களை எதிர்கொள்கின்றனர். வற்வரி நீக்குவது குறித்து அரசின் சாதகமான பதில் கிடைக்காத விடத்து வேலை நிறுத்தப் போராட்டம் தொடருமெனவும் அறிவிக்கப்படவுள்ளது. (த)

## போர்..

திருப்பதாக ஜனாதிபதி வலியுறுத்தினால் போர் நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். புலிகளின் சம்மதத்துடன் நோர்வே அனுசரணையாளர்களூடாகச் செய்யப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்த பீரிஸ் எதிர்வரும் 19ம் திகதி அன்று யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வரவிருப்பதாக அறிவித்தார்.

கடந்த செப்டம்பரில் நடைபெற்ற இறுதியான உதவி வழங்கும் கூட்டத்தில்,உதவி வழங்கும் நாடுகள் சாதகமான பதிலை அளித்துள்ளன. ஆனால் தற்போதைய நாட்டுச் சூழல் அவர்களின் நம்பிக்கையைக் குலைத்துள்ளதென்றும் பீரிஸ் தெரிவித்தார். (ந-6)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.